1754

மாக்மில்லன் தமிழ் வாசக புத்தகம்

29 SEP 1924

# முதல் வாசக புத்தகம்

இரண்டாவது வகுப்பிற்கு

TB
031(2)
N24
84547

# தமிழ்

# முதல் வாசக புஸ்தகம்

(இரண்டாவது வகுப்பிற்கு)

(புதிய பதிப்பு)

494.8118
155

29 SEP 1924

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிட்டெட்
மதறாஸ், பம்பாய், கல்கத்தா, லண்டன்.
1924

ரிஜிஸ்தர் செய்தது.] [விலை 3 அணா.

# உபாத்தியாயர் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. பாடத்தைப் படிக்கத் தொடங்குவதற்குமுன் படத்தைக் கவனிக்கும்படி பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும்.

2. படத்தின் ஒவ்வொரு பாகத்தையும் செவ்வையாக உற்றுப் பார்த்தறியும்படியாகக் கேள்விகள் கேட்கவேண்டும்.

3. படத்திற் காட்டிய பொருளைப்பற்றிப் பிள்ளைகளோடு சம்பாஷணை செய்வதுபோலக் கலந்துபேசி அவர்களுக்கு உற்சாகமுண்டாகும்படி செய்யவேண்டும்.

4. பிள்ளைகள் கவனித்தறிந்த விஷயங்களில் அவர்கள், படத்தின் மூலமாயும், யூகமாகவும் அறிந்தவற்றைப்பற்றிக் கேள்விகள் கேட்கவேண்டும்.

5. பிள்ளைகள் பார்த்தும் யூகித்தும் தெரிந்துகொள்ளக்கூடாத விஷயங்கள் சிலவற்றைப் பாடத்திற்கு அவசியமான அளவு சொல்லவேண்டும்.

6. பிள்ளைகளோடு பேசும்போது பாடத்திற்கு அதிக சம்பந்தமில்லாத விஷயங்களில் மனம் செல்லாமற் பார்த்துக் கொள்ளவேண்டும்.

7. பாடத்திற் குறித்த விஷயங்களைப்பற்றிக் கேள்விகள் கேட்கும்போது, அதன் அடியில் எழுதியிருக்கும் கேள்விகளை மாத்திரம் கேட்டுப் பாடத்தை முடித்தல் கூடாது. அக்கேள்விகளை மாதிரியாகக்கொண்டு வேறு சில கேள்விகளையும் கேட்கவேண்டும்.

8. எங்கெங்கே கூடுமோ அங்கங்கே நல்லொழுக்க முறைகளைக் கற்பிக்கவேண்டும்.

9. கடினமான பதங்கள் எவையேனும் இருக்குமானால் அவைகளுக்குத் தகுந்த சுலபமான பதங்களைக் கறுப்புப் பலகையில் எழுதிக் காட்டவேண்டும்.

10. ஒவ்வொரு பாடத்தையும் அதன் படத்திற்கு இணங்கக் கற்பித்து, பிள்ளைகள் கண்டு கேட்ட விஷயங்களோடு சம்பந்தப்படுத்தவேண்டும்.

84547
TB 031(2) N24

# பொருள் அட்டவணை.

பாடம். பக்கம்.

1. உயிர் முதல் வந்த தொடர் மொழிகள்.—Phrases beginning with words with initial vowels ... ... ... ... 1
2. மெய் முதல் வந்த தொடர் மொழிகள்.—Phrases beginning with words with initial consonants ... ... ... 1
3. சந்தியில்லாத சிறு வாக்கியங்கள்.—Short sentences without Sandhis ... ... 2
4. பலவகை வாக்கியங்கள்.—Different kinds of sentences ... ... ... ... 3
5. பசு.—The Cow ... ... ... 4
6. குதிரை.—The Horse ... ... ... 7
7. குதிரையின் கதை.—Story of a Horse ... 9
8. நாய்.—The Dog ... ... ... 12
9. நாயின் கதை.—Story of a Dog ... ... 14
10. பூனை.—The Cat ... ... ... 16
11. பூனையின் கதை.—Story of a Cat ... ... 18
12. பள்ளிக்கூடத்துத் தோட்டம், முதல் பாகம்.—School Garden, Part I ... ... 20
13. பள்ளிக்கூடத்துத் தோட்டம், இரண்டாம் பாகம். School Garden, Part II ... ... 22
14. கோழி.—The Cock ... ... ... 28
15. ஒரு பட்சி தன்னைப்பற்றிச் சொல்லிய கதை.—What a Bird said of itself ... ... 30
16. மயில்.—The Peacock ... ... ... 34
17. தட்டான்.—The Goldsmith ... ... 34

| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| 18. | மிட்டாய்க் கடை.—The Sweetmeat Shop ... | 36 |
| 19. | குயவன்.—The Potter... ... ... | 38 |
| 20. | கர்வம்.—Pride ... ... ... | 40 |
| 21. | உறவினர்.—The Relations ... ... | 42 |
| 22. | ராமாயணம்.—The Ramayana ... ... | 45 |
| 23. | அவயவங்கள் சொல்லிய கதை, முதல் பாகம்.—Story of the Limbs, Part I ... ... | 48 |
| 24. | அவயவங்கள் சொல்லிய கதை, இரண்டாம் பாகம்.—Story of the Limbs, Part II ... | 50 |
| 25. | தொழில்கள்.—Professions ... .... | 53 |
| 26. | யானை.—The Elephant ... ... ... | 56 |
| 27. | யானையின் கதை.—Story of an Elephant ... | 59 |
| 28. | நீதிகள்.—Morals ... ... ... | 62 |

| | |
|---|---|
| உலகநீதி.— ... ... ... | 63 |
| ஆத்திச்சூடி.— ... ... ... | 64 |
| பழமொழி.— ... ... ... | 65 |
| மதுரை.—Madura ... ... ... | 67 |
| விருந்து.—Feast ... ... ... | 67 |
| ஊர்கோலம்.—Procession ... ... | 68 |

# முதல் வாசகபுஸ்தகம்.

## 1. உயிர் முதல் வந்த தொடர் மொழிகள்.

1. அரண்மனை.
2. ஆல மரம்.
3. இடி ஓசை.
4. ஈச்ச மரம்.
5. உமிழ் நீர்.
6. ஊஞ்சல் பலகை.
7. எண்சுவடி.
8. ஏணி மரம்.
9. ஐந்து விரல்.
10. ஒன்பது மணி.
11. ஓட்டு வீடு.
12. ஔவை குறள்.

## 2. மெய் முதல் வந்த தொடர் மொழிகள்.

1. கலைமான்.
2. ஙப்போல் வளை.
3. சந்தன மரம்.
4. ஞான நூல்.
5. டம்பாச்சாரி.
6. கண்மணி.
7. தந்தைதாய்.
8. நடுவீதி.
9. பட்டு நூல்.
10. மண் வெட்டி.
11. யது குலம்.
12. ராம பாணம்.
13. லண்டன் நகரம்.
14. வண்டி மாடு.
15. தாழம்பூ.
16. முள் வேலி.
17. திறவுகோல்.
18. தின்பண்டம்.

# 3. சந்தியில்லாத சிறுவாக்கியங்கள்.

1. ஊருக்கு அழகு கோவில்.
2. ஆற்றில் வெள்ளம் அதிகம்.
3. கூலிவேலை செய்து பிழைத்தான்.
4. பசுமாடு பால் கொடுக்கும்.
5. அண்ணன் பாடம் படிக்கிறான்.
6. குதிரை வேகமாய் ஓடும்.
7. மான் காட்டில் திரியும்.
8. தச்சன் மரத்தை இழைக்கிறான்.
9. காளைமாடு வண்டி இழுக்கும்.
10. இடையன் மாடு மேய்ப்பான்.
11. சுவரில் சித்திரம் எழுதினான்.
12. தட்டான் நகை செய்தான்.
13. பசியாதபோது புசியாதே.
14. குறவன் கூடை முடைகிறான்.
15. பொன்னன் குடையை விரித்தான்.
16. வண்ணான் துணியை வெளுப்பான்.
17. தெருவில் தேர் ஓடுகிறது.
18. தொட்டிலில் குழந்தை தூங்குகிறது.
19. தபால்காரன் கடிதம் கொடுத்தான்.
20. தினந்தோறும் நீராடு.
21. மரத்தில் கொடி படருகிறது.
22. வைத்தியன் மருந்து கொடுத்தான்.
23. ஆடு பயிரை மேய்கிறது.
24. கடவுள் எங்கும் இருக்கிறார்.

# 4. பலவகை வாக்கியங்கள்.

1. வரவுக்குத் தக்க செலவு செய்.
2. கன்றுக்குட்டி துள்ளி யோடும்.
3. சேவகனைக் கண்டு திருடன் ஓடினான்.
4. பொய் சொல்லித் தப்ப முடியாது.
5. குளத்தை வெட்டித் தண்ணீர் பாய்ச்சினான்.
6. தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்தாள்.
7. மரத்தில் ஏறிக் கிளையை முறித்தான்.
8. காற்றடிக்கக் கனி உதிர்ந்தது.
9. ஓடத்தில் ஏறி அக்கரை சென்றார்.
10. கிணற்றில் இறங்கி ஆழம் பார்த்தான்.
11. விளக்கை ஏற்றிப் பாடம் படித்தாள்.
12. வேலை முடிந்ததும் வீட்டுக்குப் போ.
13. ஆடிக் காற்றில் அலைந்து திரிந்தான்.
16. காற்று வரும்படி வீட்டைக் கட்டு.
15. பூப்பறித்துக் குடலையில் வைத்தாள்.
16. கூரை வீட்டில் குளிர் இராது.
17. மட்டையை வெட்டிக் குட்டையில் போடு.
18. பட்டுச் சேலையைக் கட்டிக்கொண்டாள்.
19. வண்டியில் ஏறி ஊருக்குப் போனான்.
20 ஆட்டைப் பட்டியில் அடைத்தான்.
21. பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்தார்.
22. பால் குடித்துக் குழந்தை வளர்ந்தது.
23. சத்திரங் கட்டிச் சாப்பாடு போட்டான்.
24. கோயிலுக்குப் போய்க் கும்பிட்டு வந்தேன்.
25. தோட்டத்தைச் சுற்றி வேலி கட்டினான்.



# 5. பசு.

1. பையா, நீ பசுமாடு பார்த்திருக்கிறாயல்லவா? மேலே அதன் படம் இருக்கிறது பார். அதன் பக்கத்தில் கன்றுக் குட்டி இருக்கிறது. அதை இடையன் மூளையில் கயிற்றினால் கட்டியிருக்கிறான். அந்த கயிற்றிற்குத் தும்பு என்று பெயர். அது மிகவும் நல்ல பசு. எவ்வளவு சாதுவாயிருக்கிறது பார். அதன் உடம்பு மிகவும் பெரியது.

2. பசுவுக்கு எத்தனை கால்கள் உண்டு? எண்ணிப் பார். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு. நான்கு கால்கள். நமக்குக் கால்கள் இரண்டு. பசு நாலுகால் பிராணியைச் சேர்ந்தது. பசுவின் காலில் உள்ள குளம்பைப் பார்த்திருக்கிறாயா?

எப்படி யிருக்கிறது? அது இரண்டாகப் பிரிந்திருக்கிறது. பசுவுக்கு வால் உண்டு. வால் நுனியில் மயிர் கொத்தாக இருக்கும். வாலினால் பசுவுக்கு என்ன உபயோகம்! தன்மேல் ஈ, கொசுகு முதலியவை உட்கார்ந்தால், அதனால் பசு அவற்றை ஓட்டிக்கொள்ளும். இடையன் பால் கறக்கும்பொழுது வாலைக் காலோடு சேர்த்து, கயிற்றினால் கட்டுவான்.

3. பசுவின் தலையில் இரண்டு கொம்புகள் இருக்கின்றன. கொம்பின் நுனி கூர்மையாக இருக்கிறது. சில பசுக்களுக்குக் கொம்பு குட்டையாயிருக்கும். பசுவின் காது நீளமானது. நம்மைப்போலவே பசுவுக்கும் கண்கள், மூககு, வாய், பற்கள், நாக்கு இவைகள் உண்டு. பசுவின் நாக்கு நீளமானது. அதனுடைய கழுத்தும் நீளமானதுதான். அதன் மூக்கை நன்றாகப் பார்.

4. பசுமாடு புல்லை மிகவும் ஆவலாக மேயும். மேயும்போது அது நின்று கொண்டிருக்கும். பசுவின் கழுத்து நீளமாயிராவிட்டால் தரையிலுள்ள புல்லை அதற்கு மேய முடியாது. அது வைக்கோலையும், கம்பு முதலியவற்றின் தட்டைகளையும் தின்னும். தவிடு, பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு, இவைகள் அதற்கு மிகவும் பிரியமானவை. அது மாமிசம் தின்னாது.

5. பசுவுக்கு நாம் நல்ல தீனி போட்டால் அது நமக்கு அதிக பால் கொடுக்கும். பால் வெள்ளை நிறமானது. அது மிகவும் உருசியாய் இருக்கும். தேகத்திற்கு அது பலம் கொடுக்கும். அதனால்தான் நாம் பால் குடிக்கிறோம். பாலினால் மட்டுமே ஒருவன் உயிரோடிருக்கலாம்.



6. மேலே படத்தில் இடையன் பால் கறக்கிருன் பார். அவன் பாலை ஒரு சிறிய பாத்திரத்தில் வார்க்கிருன். பசு நமக்கு மிகவும் உபயோகமான பிராணி. அதனால் தான் பசுவை அநேகர் காப்பாற்றுகிருர்கள்.

**கேள்விகள்:**—பசுவைப்போல்கொம்புள்ளப்பிராணிகள் சில சொல்லு? பசுவுக்குக் கொம்பு இருப்பதனால் என்ன உபயோகம்? வாலினால் பசுவுக்கு என்ன உபயோகம்? தயிர் என்றால் என்ன? அது எப்படி உண்டாகிறது? வெண்ணெயை எப்படி எடுக்கிருர்கள்?

சித்திரம் (டிராயிங்):—பசுவின் தலை.

களிமண் வேலை.—பசுவின் குளம்பு.

பதங்கள்.—இடையன் - கயிற்றினால் - பிராணி- குளம்புகள் - பிரிந்திருக்கிறது - நின்றுகொண்டு - கூர்மையாக - பருத்திக்கொட்டை - தீனி - கறக்கிருன் - உருசியாயிருக்கும் - காப்பாற்றுகிருர்கள்.

வியாசம்.—மேற்கண்ட பதங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

Copy Form. பசுமாடு புல்லை மேயும்.



## 6. குதிரை.

1. மேலே படத்தில் குதிரை நிற்கிறது பார். பசுவைக்காட்டிலும் இது பெரிய மிருகம். இதற்கு எத்தனை கால்கள் உண்டு? இதுவும் நாலு கால் பிராணிதான். இதன் கால்கள் நீளமானவை. அப்படி இருப்பதனால் தான் குதிரை மிகவும் வேகமாய் ஓடுகிறது. இதன் குளம்பைப் பார். பசுவின் குளம்பைப்போல் இருக்கிறதா? இல்லை. பசுவைப்போல் இதற்குக் கொம்புகள்

உண்டா? இல்லை. நீ பசுவை அடித்தால் அது கொம்பினால் முட்டும். குதிரையை அடித்தால் அது காலினால் உதைக்கும்.

2. குதிரையின் கழுத்து நீளமானது. அதன் கழுத்தின்மேல் மயிர் தொங்கிக்கொண்டிருக்கும். அதற்குப் பிடரிமயிர் என்று பெயர். அதன் காதுகள் சிறியவை. இரண்டு காதுகளுக்கும் நடுவில் கொத்தாய் மயிர் தொங்குகிறது. குதிரையின் கண்கள் மிகவும் விசாலமானவை. அது தலையைத் திருப்பாமலே எதிரே இருப்பதையும் பக்கங்களில் இருப்பதையும் பார்க்கும். குதிரைக்கு மூக்குச் சிறியது. மூக்குத் துவாரங்கள் பெரியவை. பசுவின் தலையைக் காட்டிலும் குதிரையின் தலை நீளமானது.

3. குதிரை என்ன தின்னும்? புல், கொள், கடலை, கோதுமைத்தவிடு, முதலியவைகளைத் தின்னும். கொள்ளை நீ பார்த்திருக்கிறாயா? கடலையையும், கொள்ளையும் வேகவைத்துக் குதிரைக்கு வைக்கவேண்டும். குதிரை மாமிசம் தின்னாது.

4. குதிரை தன் முதுகின்மேல் மனிதனை ஏற்றிக்கொண்டு செல்லும். அது வண்டியிழுக்கும். அதன்குளம்பு தேயாதபடி லாடம் அடிப்பார்கள். அது மிகவும் உபயோகமான பிராணி. நாம்நம்முடைய பிள்ளையைக் காப்பாற்றுவதுபோல அதையும் காப்பாற்றவேண்டும்.

5. குதிரைக்காரன் குதிரையைக் காப்பாற்றுகிறான். அதற்குத் தெளிவான தண்ணீர் காட்டுகிறான். புல் போடுகிறான். தண்ணீரில் குளிப்பாட்டுகிறான். உடம்பைப் பிடித்துத் தேய்க்கிறான்.

6. குதிரையின் முதுகு எவ்வளவு அகலமாயிருக்கிறது பார். குதிரையின் வால் பசுவின் வாலைப்போலில்லை. வால் முழுதும் நீண்டமயிர் அடர்ந்திருக்கின்றன. கொசுகு, ஈ முதலியவை தொந்தரவு செய்தால் குதிரை தன் வாலினால் அவற்றை ஓட்டிக்கொள்ளும்.

கேள்விகள்:—குதிரையைப்போல் ஒற்றைக் குளம்புள்ள வேறொரு பிராணியின் பெயர் சொல்லு? பசுவுக்கும் குதிரைக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம் என்ன? லாடம் எதனால் செய்யப்படுகிறது? அது என்ன வடிவமாயிருக்கும்? கடிவாளம் என்றால் என்ன? அதை எங்கே போடுகிறார்கள்? அதனால் என்ன உபயோகம்?

டிராயிங்.—குதிரை லாடம்.

களிமண் வேலை.—குதிரையின் குளம்பு.

பதங்கள். பிராணி—நீளமானவை—முட்டும்—பிடரிமயிர்—லாடம்—திருப்பாமலே—தேய்க்கிறான்—அழுத்தமானது—தொந்தரவு.

வியாசம்.—மேற்கண்ட பதங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

Copy Form. குதிரை கனைக்கும்—கழுதை கத்தும்.

## 7. குதிரையின் கதை.

1. மதுரை என்கிற பட்டணத்தில் குதிரை வர்த்தகன் ஒருவன் இருந்தான். அவன் மிகுந்த ஏழை. அவன் ஒரு குதிரையை, அது குட்டியா

யிருந்தது முதல் மிகவும் பிரியமாக வளர்த்து வந்தான். அது பார்க்க வெகு அழகாக இருந்தது. அந்த நகரத்து அரசனுடைய மந்திரி அதை வாங்கி அரசனுக்குக் கொடுக்க எண்ணினான்.

2. மந்திரி குதிரை வியாபாரியிடம் சென்று அதை விலைக்குக் கேட்டான். அவன் அதை விற்க முதலில் சம்மதிக்கவில்லை. மந்திரி மிக



வும் கட்டாயப்படுத்தினான். ஏராளமான பணம் கொடுத்தால் கொடுப்பதாக வர்த்தகன் சொன்னான். மந்திரி இரண்டு தினங்கள் அதைப்பற்றி யோசித்து, வாங்கலாமென்று கடைசியில் நிச்சயித்தான்.

3. அப்போது குதிரையுடன் தன் வீட்டுக்கு வந்து சேரும்படி குதிரை வியாபாரியிடம் ஒரு

சேவகனை அனுப்பினான். உடனே அவன் அந்தக் கம்பீரமான குதிரையின்மேல் ஏறிக்கொண்டு வந்தான். அவன் வந்ததும் தான் கொடுப்பதாகச் சொன்ன பணத்தை மந்திரி எண்ணிவைத்தான். குதிரை வர்த்தகனும் அந்தப் பணத்தை எடுத்துக் கொள்வதற்காகக் கீழே இறங்கினான்.

4. பணத்தை எடுத்துக் கொள்வதற்கு முன் கொஞ்சம் யோசித்துத் தன் குதிரையை உற்று நோக்கி, 'என் கண்ணே ! இந்தப் பணத்திற்காக அல்லவா உன்னை விற்க நான் சம்மதித்தேன் ? அரண்மனையில் உனக்கு என்ன சௌக்கியம் கிடைக்கும் ? உன் மேன்மை யாருக்குத் தெரியும் ? பத்தோடு பதினொன்றாகக் கட்டி வைக்கப் போகிறார்கள். நீ என்னுடன் வந்து என்னையும் என் குழந்தைகளையும் சந்தோஷப்படுத்து' என்று சொல்லி மறுபடி குதிரையின் மேல் ஏறிக்கொண்டு பணத்தை எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிட்டு வீட்டிற்குத் திரும்பிவிட்டான்.

பதங்கள்.—வர்த்தகன்—ஏழை—அரசன்—மந்திரி—வெகுமதி—ஏராளமான—சேவகன்—கம்பீரமான—எண்ணிவைத்தான்—அரண்மனை—சௌக்கியம்.

வியாசம்.—மேற்கண்ட பதங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

Copy Form. குதிரை ஒரு கம்பீரமான மிருகம்.



# 8. நாய்.

1. இந்தப் படத்தில் என்ன இருக்கிறது பார். ஒரு நாய் இருக்கிறது. அது பார்வைக்கு எவ்வளவு அழகாயிருக்கிறது! தெருவில் திரியும் நாய்கள் இவ்வளவு அழகா யிருக்குமா? நாயை நாம் வளர்த்தால் அது நம்மிடத்தில் அன்பா யிருக்கும்.

2. பசு, குதிரை இவற்றைப்போல் நாய் அவ்வளவு பெரிய பிராணியா? இல்லை. நாய்க்குக் கால்கள் நான்கு. அவைகள் நீளமாக இருக்கின்றன. அதனாலேதான் அது மிகவும் வேகமாக ஓடுகிறது. அதன் காலில் குளம்பு இல்லை. ஆனால் கூர்மையான நகங்கள் உண்டு.

3. நாய்க்கு முகம் நீளமாக இருக்கும். அதன் மூக்கைப் பார். மூக்கின் நுனி கூர்மையானது.

தன் மோப்பத்தினுல் எதையும் அது சுலபமாக அறிந்து கொள்ளும். அது வாயைத் திறக்கும் போது அதன் பற்களைப் பார். நம்முடைய பற்களைப்போல் அவை இருக்கமாட்டா. அவைகள் கூர்மையாயிருக்கும். பதார்த்தங்களை நன்ருய் வெட்டிவிடும். நாய் பல்லினுல் மாமிசத்தைக் கடித்துத் துண்டு துண்டாக்கித் தின்னும். அது சோறும் தின்னும். புல்லைத் தின்னுது.

4. நாய் மிகவும் நல்ல பிராணி. அதை வளர்த்தால் சமயத்தில் அது நமக்காகத் தன் பிராணனையும் கொடுக்கும். அது நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றும். திருடனை வீட்டுக்குள் வர விடாது. இரவெல்லாம் வீட்டைக் காக்கும். திருடனைப் பார்த்தவுடன் பலமாகக் குரைக்கும். அப்பொழுது திருடன் பயந்து ஓடிப்போவான்.

கேள்விகள்:—நாய்க்குக் குளம்பு உண்டா? நாயின் விசேஷகுணம் என்ன? அது என்ன தின்னும்? நாயைவளர்ப்பதால் என்ன பிரயோஜனம்?

டிராயிங்.—நாயின் காதுகள்.

களிமண் வேலை:—நாயின் தலை.

பதங்கள்.—பார்ப்பதற்கு - திரியும் - நகங்கள் - கூர்மையாய் - வெட்டி விடும் - மாமிசம் - பிராணன் - குரைக்கும்.

வியாசம்.—மேற்கண்ட பதங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

Copy Form. நாய் மிகவும் நன்றியுள்ள மிருகம்.

# 9. நாயின் கதை.

1 ஓர் இடைப்பையன் ஒருநாயை வளர்த்து வந்தான். அவன், தான் சாப்பிடும்போதெல்லாம் அதற்கு ஏதாவது ஆகாரம் கொடுப்பான். அதனால் அவனிடத்தில் அது மிகவும் பிரியமாக இருந்தது. அவனை விட்டு ஒரு போதும் பிரியாமல் அவன் எங்கே போனாலும அது கூடவே போகும். அவன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு மேய்க்கப் போனால் அதுவும் அவன் பின்னே போகும். ஆடுகள் மந்தையிலிருந்து தவறிப் போகாமல் பார்த்துக்கொள்ளும்.

2. ஒரு நாள் அவன் ஒருமரத்திலிருந்துகீழே விழுந்துவிட்டான். அவனால் எழுந்திருக்க முடியவில்லை. அதனால் அடிபட்டு இரத்தம் பெருகிற்று. அவன் விழுந்த இடம் ஒரு மலையடி வாரம். மலையடிவாரத்துக்கும் அவன் வீட்டுக்கும் வெகு தூரம். சமீபத்தில் ஒருவரும் இல்லை.

3. அப்போது அந்த நாய் அவனிடம் ஓடி வந்தது. அவன் தன் துணியை அதன்கழுத்தில் சுற்றி வீட்டுக்குப் போகும்படி அதற்கு ஜாடை காட்டினான். உடனே அது மிகவும் வேகமாய் வீட்டுக்கு ஓடிற்று. வீட்டின் கதவு மூடியிருந்தது. நாய் உரக்கக் குரைத்து நகங்களால் கதவைப் பிராண்டிற்று. அந்தப் பையனுடைய தகப்பன் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். நாயின் கழுத்தில் தன் மகனது துணி இருப்பதைப் பார்த்தான். அதில் இரத்தக் கறை இருந்

தது. நாய் அழுதுகொண்டு அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது.

4. எல்லாவற்றையும் பார்த்து அவன் தன் மகனுக்கு ஏதோ ஆபத்து வந்தது என்று தெரிந்து கொண்டான். பிறகு நாயை முன்னே விட்டுக் கொண்டு அதன் பின்னே போனான். அது



கழுத்தில் துணியுடன் நாய் கதவைப் பிராண்டுகிறது.

அவனைப் பையனிடம் அழைத்துக்கொண்டு போயிற்று. பின்பு தகப்பன் பையனைத் தூக்கிக் கொண்டு வந்து சௌக்கியப் படுத்தினான்.

பதங்கள்.—இடைப்பையன் — பிரியமாக — ஓட்டிக்கொண்டு — பேய்க்க—மந்தை—தவறிப்போகாமல் - மலையடிவாரம் — ஜாடை — வேகமாய் — பிராண்டிற்று.

வியாசம்.—இந்தக்கதையைச் சுருக்கி எழுதுக.
Copy Form. நாய் வாலைக் குழைக்கும்.

# 10. பூனை.

1. கீழே உள்ள படத்தில் ஒரு பெரிய பூனையும் அதன் பக்கத்தில் நான்கு குட்டிகளும் இருக்கின்றன பார். பூனை நம்முடைய வீடுகளில் திரியும் பிராணி. பூனையைத் தொட்டுப் பார். அதன் உடம்பெல்லாம் மிருதுவாயிருக்கும். நாயைவிட பூனை சிறிய பிராணி அதன் தலை உருண்டையானது. முகம் விரிவாக இருக்கும். முகத்தின் இரண்டு பக்கங்களிலும் மீசைமயிர் நீண்டு இருப்பதைப் பார்த்தாயா? பூனை இருட்டில் திரியும்போது வழியில் இருப்பதைத் தன் மீசை மயி



ரினால் தெரிந்துகொள்ளும். பூனையின் கண்கள் உருண்டையானவை. நம்முடைய கண்களைப் போல் அவை நீளமாக இல்லை. நாம் இராத்திரி வேளையில் இருட்டில் ஒன்றையும் வெளிச்சமில்லாமல் பார்க்க முடியாது. பூனையோ இரவில் வீட்டில் எலிகள் ஓடுவதைத் தெரிந்து கொள்

ளும். பகலில், அது கண்ணை நன்ருய்த் திறக்காது. இராத்திரி வேளையில் அது கண்ணைத் திறந்து எல்லாவற்றையும் நன்ருய்ப் பார்க்கும்.



2. பூனையின் பாதத்தை உற்றுப் பார். அதன் அடிப்பாகத்தில் மாமிசம் உருண்டையாயிருக்கும். அதைத் தொட்டுப்பார்த்தால் அது கைக்கு மெத்தென்று இருக்கும். ஆகையினுலே தான் அது ஓடும்போது சத்தம் உண்டாகிறதில்லை. ஆகையால் எலி, மூஞ்சூறு இவற்றை அது சுலபமாய்ப் பிடித்துக்கொள்ளுகிறது.

3. பூனையின் காலில் நகம் எப்படிவளைந்திருக்கிறது பார். இந்த நகங்கள் மிகவும் கடினமாகவும் கூர்மையாகவும் உள்ளன.

4. பூனையானது பால், தயிர் இவற்றைக் குடிக்கும். வெண்ணெய், நெய்கலந்தசோறு. மாமிசம் இவற்றைத் தின்னும். பூனைக்குட்டிகள் நன்ருக விளையாடும். பூனை தன் குட்டிகளை வாயினுல் கௌவிக்கொண்டு போவதைப் பார்த்தால் மிகவும் வேடிக்கையாக இருக்கும். குட்டிகளின் மேல் அழுக்கில்லாமல் நக்கும். பூனை 'மியா மியா' என்று கத்தித் தன் குட்டிகளைக் கூப்பிடும்.

கேள்விகள்:—பூனைக்கு மீசைமயிரினுல் என்ன உபயோகம்? பூனை நடக்கும்போது ஏன் சத்தம் உண்டாவதில்லை? பூனைக்கு எப்பொழுது கண் நன்ருய்த் தெரியும்? பூனையை ஏன் வளர்க்கிருர்கள்?

டிராயிங்:—பூனையின் வால்.

களிமண் வேலை:—பூனையின் தலை.

பதங்கள்.—பூனைக்குட்டி — மெத்தென்றிருக்கும் — மீசை மயிர் — உருண்டையானவை — இராத்திரி — பார்க்க முடியாது—வெண்ணெய் —சுலபமாய்.

வியாசம்.—மேற்கண்ட பதங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

Copy Form. பூனைக்குக் கொண்டாட்டம், எலிக்குத் திண்டாட்டம்.

## 11. பூனையின் கதை.

1. இராயர் சம்ஸ்தானத்தில் தென்னாலிராமன் என்ற விகடன் ஒருவன் இருந்தான். இராயர் சில பூனைக்குட்டிகளை வளர்க்க எண்ணி, தம்மிடம் வேலையாயுள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பூனைக்குட்டியையும், பூனைக்குட்டிக்கு வேண்டிய பாலுக்காக ஒவ்வொரு பசுவையும் கொடுத்திருந்தார். அப்போது தென்னாலிராமன் ஒரு பசுவையும் ஒரு பூனைக் குட்டியையும் வாங்கிக் கொண்டு போனான்.

2. எல்லோரும் பசுவின் பாலைப் பூனைக்குட்டிக்கு வைத்து நன்றாய் வளர்த்தார்கள். தென்னாலிராமன் மட்டும் முதல் நாள் பாலை நன்றாய்ச் சுடச் சுடக் காய்ச்சிப்பூனைக்குட்டிக்கு வைத்தான். பால் மிகவும் சூடாயிருந்ததால், பூனைக்குட்டியின் வாய், வெந்து போய்விட்டது. அது முதல்

பாலைக்கண்டமாத்திரத்தில் அந்தப் பூனைக்குட்டி ஓட்டம் பிடித்தது. தென்னாலிராமனே பாலையெல்லாம் சாப்பிட்டு வந்தான்.

3. தாம் வளர்க்கச்சொன்ன பூனைகளைப் பார்ப்பதற்காக எல்லோரையும் பூனைகளுடன் வரும்படி இராயர் உத்தரவு செய்தார். எல்லோரும் வந்தார்கள். மற்றவர்களைப்போல் தென்



பூனை பாலைப் பார்த்தவுடன் ஓட ஆரம்பித்தது.

னாலிராமனும் பூனையுடன் வந்தான். அவன் பூனையைத் தவிர மற்றவர்களின் பூனைகள் எல்லாம் நன்றாய் வளர்ந்திருந்தன.

4. இராயர் 'உன் பூனைமாத்திரம் ஏன் வளரவில்லை?' என்று அவனைக் கேட்டார். அதற்கு அவன், 'ஐயா, நான் என்ன செய்வேன்? இது பாலைக் கண்டதும் ஓட்டம் பிடிக்கிறது' என்

ளூன். இராயர் ஆச்சரியமடைந்து சிறிது பாலைக் கொண்டுவரச் சொல்லித் தமக்கு எதிரில் அதை அந்தப் பூனைக்கு வைத்தார். அது பாலைப் பார்த்தவுடன் ஓட ஆரம்பித்தது. பிறகு இராயர் அதன் வாயை உற்றுப் பார்த்து உண்மையை அறிந்துகொண்டார். தெனாலிராமன் யுக்திக்காக எல்லோரும் நகைத்தார்கள்.

பதங்கள்.—சம்ஸ்தானம்-விகடகவி-வளர்க்க-சூடாயிருந்தது - எல்லோரையும்-என்ன செய்வேன் - ஆச்சரியமடைந்து—நகைத்தார்கள்.

வியாசம்.—இக்கதையைச் சுருக்கி எழுதுக.

Copy Form. பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன்.

# 12. பள்ளிக்கூடத்துத் தோட்டம்.

முதல் பாகம்.

ராமனும் ரங்கனும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள்.

ரங்கன்:உபாத்தியாயர் இன்னும் வரவில்லை. நாம் இந்தத் தோட்டத்தைப் பார்த்து வரலாம் வா.

ராமன் : தோட்டக்கார முருகன் தண்ணீர் கொண்டுவரப் போயிருக்கிறான். தோட்டத்தின் கதவு திறந்திருக்கிறது. (உள்ளே போகிறார்கள்.) இங்கே பூஞ்செடிகள் இருக்கின்றன.

ரங்கன்: இது மல்லிகைச்செடி, ராமா. இது எவ்வளவு அழகாய் இருக்கிறது பார். பூ வெள்ளையாய் இருக்கிறது. இது நல்லமணம் உள்ளது. இவைகள் அரும்புகள். சாயங்காலம் பூக்கும். அப்போது பார்ப்பதற்கு இன்னும் அழகாயிருக்கும். இவற்றைத் தொடுத்துத் தலையில் வைத்துக் கொள்வார்கள்.

ராமன்: பூக்கார மாணிக்கம் என் வீட்டுக் கலியாணத்திற்கு மல்லிகைப் பூமாலைகளும் செண்டுகளும் கொண்டு வந்தான்.

ரங்கன்:இது அடுக்கு மல்லிகை. அது ஜாதி மல்லிகை. மல்லிகைப் பூவில் எத்தனை விதங்கள் உண்டு தெரியுமா? இன்னும் ஒருமாதம் போனால் இந்தச் செடிகள் பூக்கமாட்டா. கோடைக் காலத்திலே தான் இவை பூக்கும்.

ராமன்:நேற்று மூன்றுவது வகுப்புப் பையன் ஒருவன் சிவந்தி (சாமந்தி)ச் செடியை அங்கே நட்டான். அதைப் பார்ப்போம் வா. இதுதானா அந்தச் செடி?

ரங்கன் : சிவந்திப் பூவை நீ பார்த்திருக்கிறாயா?

ராமன்: நான் பார்த்ததில்லையே.

ரங்கன்: நீ மறந்துபோய்விட்டாய். உன்னை முதலில் வாசிக்க வைத்தபோது நீ போட்டுக் கொண்டது சிவந்திப்பூ மாலைதானே. அந்தப் பூ பொன்னைப்போல் மஞ்சள் வர்ணத்தோடு வட்டமாகஇருக்கும். இரண்டு மூன்று மாதங்கள் கழித்து மழை பெய்ய ஆரம்பித்த உடனே இச்செடிகள் பூக்க ஆரம்பிக்கும். இந்தப் புஷ்

பத்துக்கு வாசனை கிடையாது. இதில் வெள்ளை யான வகையும் உண்டு.

ராமன் : இது என்ன புஷ்பம்? தரையெல் லாம் விழுந்து கிடக்கிறது.

ரங்கன்: இது சம்பங்கி. இதன் காம்பு மிக வும் நீளம். செடி முழுவதும் புஷ்பம் இருப் பதைப் பார்.

ராமன் : அங்கே பந்தலின்மேல் இருக்கிற தே, அது என்ன பூ?

ரங்கன்: அதுவும் சம்பங்கிதான். அதுகொடி சம்பங்கி. கொடி சம்பங்கிப்பூ அடிப்பக்கத்தில் பச்சை நிறமாகவும் மேலே மஞ்சள் நிறமாகவும் இருக்கும். அதன் வாசனையைப் பார்.

ராமன் : இது என்ன பூ? செடி முழுதும் முள் இருக்கிறதே.

ரங்கன்:இது ரோஜாப்பூ. எவ்வளவு அழகு! புஷ்பங்கள் எல்லாவற்றிலும் இதுவே அழகா னது. நல்ல வாசனையும் உள்ளது. வெள்ளை ரோஜா, மஞ்சள் ரோஜா, சிவப்பு ரோஜா என்று ரோஜாக்களில் அநேகவிதங்கள் உண்டு.

ராமன்: நமது தோட்டத்தில் தாமரைப் பூ இல்லையா? தாமரை இலை விற்பவன் இன்று தாமரைப்பூ கொண்டுவந்தான். அவைகள் எவ் வளவு நன்றாயிருக்கின்றன! என் தாயார் அரை யணவுக்கு நான்கு பூக்கள் வாங்கினாள்.

ரங்கன் : தாமரை நமது தோட்டத்தில் பயி ராகாது. அவைகள் தண்ணீரிலேதான் வளரும். அங்கே குளம் இருக்கிறது பார். அதில் தாம ரைக்கொடி இருக்கிறது. இங்கே பார். சுப்பன்

குளத்திலிருந்து தண்ணீர்க் காவடியுடன் வருகிறான்.



ராமன்: காவடி எதற்காக?

ரங்கன்: காவடியில் என்ன வைத்திருக்கிறான் பார். பானைகள்.

ராமன்: அவை எதற்கு?

ரங்கன்: அவற்றில் தண்ணீர் கொண்டுவந்து தினந்தோறும் செடிகளுக்கு விடவேண்டும். இல்லாவிட்டால் அவை வாடிப்போம்.

ராமன்: அதோ உபாத்தியாயர் வருகிறார்.

ரங்கன்: அப்படியானால் நாம் வகுப்புக்குப் போவோம் வா.

கேள்விகள்:—மல்லிகைப் பூ என்ன நிறமானது? மல்லிகைப் பூவில் எத்தனை விதங்கள் உண்டு? தாமரை எங்கே பயிராகும்? தண்ணீர்க் காவடி என்றால் என்ன?

டிராயிங்.—மல்லிகைப் பூ.

களிமண் வேலை.—பானை.

பதங்கள்.—பூஞ்செடிகள்—அழகாய்—அரும்புகள் — சாயங்காலம்—பூக்காரன் — வெயிற்காலம் — வர்ணத் தோடு.

வியாசம்.—மேற்கண்ட பதங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

Copy Form. தோட்டத்துப்பச்சிலைக்கு வீரியம் மட்டு.

## 13. பள்ளிக்கூடத் தோட்டம்.

இரண்டாம் பாகம்.

ராமன்: ரங்கா, இன்றைக்கும் சீக்கிரம் பள்ளிக்கூடம் போய்த் தோட்டத்தைப் பார்க்கலாம் வா.

ரங்கன்: ராமா, இதோ வந்துவிட்டேன். (இருவரும் தோட்டத்துக்குப் போகிறார்கள்.)

ராமன்: தோட்டக்கார முருகன் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிருன் பார். இது என்ன செடி? எலுமிச்சஞ் செடி அல்லவா?



ரங்கன்: ஆம், இது எலுமிச்சைதான். இது அதிக உயரமில்லை. இதன் நாலு பக்கங்களிலும்

கிளைகள் இருக்கின்றன. இதில் இலைகள் கூடாரம்போல் தழைத்திருக்கின்றன. இலையைக் கசக்கிப்பார். நல்ல வாசனை உண்டாகும். எலுமிச்சம் பூ வெள்ளை நிறமானது. காய் பச்சை நிறம். பழம் மஞ்சளாக இருக்கும். பழம் எவ்வளவு உருண்டையா யிருக்கிறது பார்.

ராமன்: எலுமிச்சம் பழத்தை நாம் சாப்பிடலாமா? மாம்பழத்தைப்போல் உருசியாயிருக்குமா?

ரங்கன்: எலுமிச்சம்பழம் புளிப்பென்று தெரியாதா? எங்கள் வீட்டில் இதை நனருய்க் கசக்கிக் கத்தியால் நறுக்கி அதன் ரசத்தை மோருக்குப் பிழிவார்கள். மோர் மிகவும் உருசியாயிருக்கும்.

ராமன்: எங்கள் வீட்டில் எலுமிச்சங்காயை ஊறுகாய் போட்டிருக்கிருர்கள். நான் அதைச் சாப்பிட்டிருக்கிறேன். அதில் புளிப்பு இல்லையே!

ரங்கன்: உண்மைதான். ஊறுகாயில் அதிகமாக உப்பு கலந்திருப்பதால் உனக்கு அப்படியிருக்கிறது. எலுமிச்சையின் இயற்கையான உருசி புளிப்புத்தான். மாம்பழத்தில் சில புளிப்பாயிருக்கும். மாங்காய் புளிக்கும். நீ புளி சாப்பிட்டிருக்கிரு யல்லவா? அதன் உருசிதான் புளிப்பு. எலுமிச்சம் பழமும் அதைப்போலவே புளிப்பானதுதான். அது புளியைக் காட்டிலும் தேகத்திற்கு நல்லது.

ராமன்: ஆனல் பழத்தில் இரண்டு விதமா? சில தித்திப்பும் சில புளிப்புமா? சரிதான். இது என்ன செடி?

ரங்கன்: இது மிளகாய்ச் செடி. இதுவே பச்சை மிளகாய்.

ராமன்: காய் பச்சையாயிருக்கிறது. வற்றல் மிளகாய் சிவப்பா யிருக்கிறதே. அது எப்படி?

ரங்கன்: சாதாரணமாய் எல்லாக் காய்களும் பச்சை நிறமாய்த்தான் இருக்கும். பழுத்தால்சில மஞ்சள் நிறமாயும், சில சிவப்பு நிறமாயும் சில கறுப்பாயும் ஆகும். மிளகாய் தின்ருல் காரமாய் இருக்கும். இதோ பார் பாகற்காய்.

ராமன்: இதற்கு ஏன் பந்தல் போட்டிருக்கிருர்கள்?

ரங்கன் : பாகற்காய் கொடியில் காய்க்கும். மேலே கொடி படர்வதற்கே பந்தல் போட்டிருக்கிருர்கள். அதன் பூ மஞ்சள் நிறமாயிருக்கிறது பார். இதோ பார் பாகல் பிஞ்சு. இது நீளமான பாகற்காய். மிதிபாகல் அதோ இருக்கிறது பார். காய் சிறியதாக இருக்கும். அது தரையிலேயே காய்க்கிறது. பாகற்காய் கசப்புள்ளது. இதோ மணி யோசை கேட்கிறது. பள்ளிக்கூடம் போகலாம் வா.

கேள்விகள்:—எலுமிச்சம் பழத்திஞல் என்ன உபயோகம்? பழங்களெல்லாம் என்ன என்ன நிறமாயிருக்கும்? பாகல் எத்தனை விதம்? பாகல் காய் எப்படி யிருக்கும்? கறுப்பு நிறமுள்ள பழங்கள் சிலவற்றைச் சொல்க.

பதங்கள்.—உயரமில்லை—கூடாரம்- நறுக்கி- ஊறுகாய்—புளிப்பு — படர்வதற்கே—பந்தல்—மிதிபாகல்.

வியாசம்.—உன் பள்ளிக்கூடத்துத் தோட்டத்தைப்பற்றிச் சுருக்கி எழுதுக.

Copy Form. உப்பு இல்லாப் பண்டம் குப்பையிலே.



# 14. கோழி.

1. கோழி ஓர் அழகான பட்சி. எவ்வளவு நேராய் அது நிற்கிறது! அதன் இறகுகளைப் பார். எவ்வளவு நீளமாயிருக்கின்றன? ஆண் கோழிக்குச் சேவல் என்றும், பெண் கோழிக்குப் பெட்டை என்றும் பெயர். சேவலுக்குத் தலையில் கொண்டை உண்டு. கொண்டை சிவப்பாய் இருக்கும். இறகுகள் வெள்ளையாயும், சிவப்பாயும், கறுப்பாயும், மஞ்சள் நிறமாயும் இருக்கும். அதன் தலை சிறியது. மூக்கைப் பார். அதற்குப் பல் கிடையாது. அதற்குக் காது உண்டு. அதை மயிர் மூடிக்கொண்டிருக்கிறது.

2. சேவலோடு பெட்டைக் கோழியும் குஞ்சுகளும் படத்தில் இருக்கின்றன. பெட்டைக்கோழி சேவலைப்போல் அழகாக இராது. அத்தனை பெரிதாகவும் இராது. அதன் இறகுகளும் அவ்

வளவு பளபளப்புள்ளவை அல்ல. பெட்டைக் கோழி முட்டை இடும். பிறகு முட்டையின் மேல் உட்கார்ந்து அடைகாக்கும். அப்பால் முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிப்படும்.

3. குஞ்சு பெரிதாகிறவரையில் தாய் அதற்கு இரைதேடிக் கொடுக்கும். பூனையாவது பருந்தாவது வருவதைக் கோழி கண்டால் குஞ்சுகளை அது கூவி அழைக்கும். உடனே குஞ்சுகள் தாயினிடத்தில் ஓடும். அது தன் சிறகுகளால் அவைகளை மறைக்கும்.

4. சேவல் விடியற்காலத்திலே எழுந்து எல்லாருக்கும் கேட்கும்படி உரக்கக் கூவும். அது கூவி என்ன சொல்லுகிறது? "எழுந்திரு, எழுந்திரு, உன்வேலைக்குப் புறப்படு" என்று சொல்லுகிறது. குடியானவன் சேவலின் சத்தத்தைக் கேட்டு எழுந்து வயலுக்குப் புறப்படுவான்.

கேள்விகள்.—சேவலின் இறகுகள் என்ன நிறமானவை? அதன் தலையில் இருப்பது என்ன? முட்டையிலிருந்து என்ன வெளிப்படும்? வேறு சில பட்சிகளின் பெயர் சொல்லு. பருந்து வந்தால் பெட்டைக்கோழி என்ன செய்யும்? சேவல் காலையில் என்ன சொல்லிக் கூவுகிறது? அதைக் கேட்டுக் குடியானவன் என்ன செய்வான்?

பதங்கள்.—நிற்கிறது — இறகு — சேவல்— கறுப்பாய் — நிறமுள்ள—மறைக்கும்—விடியற்காலம்—புறப்படு— குடியானவன்.

வியாசம்:—சேவலுக்கும் பெட்டைக் கோழிக்கு முள்ள வித்தியாசமென்ன?

Copy Form. கோழி அடிக்கக் குறுந்தடி வேண்டுமோ?



## 15. ஒரு பட்சி தன்னைப்பற்றிச் சொல்லிய கதை.

1. நான் ஒரு மரத்தில் உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன். எதிரேயுள்ள கூட்டில் ஒரு பெண் குருவி இருக்கிறது பார். அது முட்டைகளின் மேல் உட்கார்ந்திருக்கிறது. அப்படி உட்கார்ந்தால்தான் முட்டை சூடாக இருக்கும். கொஞ்ச நாள் ஆனபிறகு முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிப்படும். குஞ்சுகளுக்குச் சிறகுகள் இல்லை. ஆகையால் அவைகள் பறக்கமாட்டா.

2. எங்களுடைய வீடு கூடுதான். குச்சிகளாலும் இலைகளாலும் நாங்கள் கூடுகட்டுகிறோம். கந்தை, பஞ்சு, மயிர் முதலியவைகளை வைத்து உட்பக்கத்தை மெத்தென்றும் உஷ்ணமாகவும் செய்துகொள்ளுகிறோம். சிறு குஞ்சுகள் பறக்கிறவரையில் இருப்பதற்காகத்தான் நாங்கள் கூடு கட்டுகிறோம். கொஞ்ச காலமானால் குஞ்சுகளுக்கு

இறகு முளைக்கும். அப்போது நாங்கள் அவை களுக்குப் பறக்கக் கற்றுக் கொடுப்போம்.

3. கிளையின்மேல் உட்கார்ந்திருக்கிற நான் ஆண்குருவி. நாங்கள் பாடும் பட்சிகள். எவ்வளவு நன்ருகப் பாடுகிருேம்? எவ்வளவு அழகாய் இருக்கிருேம்! சில கெட்ட பிள்ளைகள் எங்கள்மேல் கல்லை எறிகிருர்கள். அதனுல் நாங்கள் துன்பம் அடைகிருேமே! அப்படி எறியலாமா? நாங்கள் யாருக்கு என்ன தீங்கு செய்கிருேம்? நாங்கள் பாடி எல்லாருக்கும் சந்தோஷத்தை உண்டாக்குகிருேம். எங்களிடத்தில் பட்சமாய் இருக்கவேண்டும். எங்களுக்கு யாதொரு தீங்கும் செய்யக்கூடாது.

4. நாங்கள் ஆகாயத்திற் பறப்போம். அப்போது சிறகுகள் விரிந்து இருக்தும். மற்றவேளைகளில் சிறகுகள் சுருங்கி உடம்போடு ஒட்டியிருக்கும். தேகத்துக்குச் சட்டைபோல் இறகுகள் எங்களுக்கு உதவுகின்றன.

கேள்விகள்:—முட்டைகளிலிருந்து என்ன வெளிப்படும்? பட்சிகளின் உடம்பில் என்ன என்ன இருக்கின்றன? பட்சிக்கூடு எதனுற் கட்டியிருக்கும்? பட்சிகளின்மேல் என் கல் எறியக்கூடாது? அவைகள் நமக்கு என்னசெய்கின்றன?

டிராயிங்.—பட்சியின் கால்.

களிமண் வேலை.—முட்டை.

பதங்கள்.—சூடாய்-பறக்க-பட்சிகள்-உஷ்ணம்—கிளையின்மேல்-சந்தோஷம்-பட்சமாய்—யாதொரு.

வியாசம்.—ஒரு பட்சியின் கதையைச் சுருக்கமாய் எழுதுக.

Copy Form. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமா?



# 16. மயில்.

1. பட்சிகளுக்குள் அழகானது மயில். அதன் தோகையைப் பார். எவ்வளவு நீளமாய் இருக்கிறது! என்ன அழகு! கண்கள்போல அதில் சில இருக்கின்றனவே பார்த்தாயா? அவை தங்கத்தைப்போல் மின்னுகின்றன. பச்சை, மஞ்சள், நீலம் ஆகிய மூன்று நிறங்களும் தோகையில் தெரியும். மயிலின் தலை சிறியது. அதன் கழுத்து நீளமாயும் நீல நிறமாயும் இருக்கும்.

2. மயிலின் தோகை சாதாரணமான வேளையில் சுருங்கி இருக்கும். அப்போது அது ஒரு பெரிய கோழியளவு இருக்கும். ஆண் மயிலுக்குத்தான் தோகை உண்டு. பெண்மயிலுக்கு தோகை இல்லை. ஆண்மயில் சந்தோஷப்படும்போது சிறகை விரித்து ஆடும். பெண் மயில்

ஆடாது. படத்தில் இருப்பது ஆண் மயில். அதன் தலையில் கொண்டை இருக்கிறது பார்.

3. மயில் காடுகளில் வசிக்கும். அது பூச்சிகளையும் புழுக்களையும் தானியங்களையும் தின்னும். மயிலைக் குஞ்சாய் இருக்கும்போதே பிடித்துப் பழக்குவது உண்டு. பணக்காரர்கள் மயில்களைத் தங்கள் தோட்டங்களில் அழகுக்காக வளர்க்கிறார்கள். கோயில்களிலும் மயிலை வளர்ப்பதுண்டு. மயிலின் குரல் காதுக்கு இனிமையாய் இராது. அதன் சத்தம் வெகுதூரம் கேட்கும். மயில் இறகுகளினால் விசிறி கட்டுவார்கள். மயில் இறகு மருந்திற்கும் உபயோகப்படும்.

கேள்விகள்:—மயில் எவ்விதமான பட்சி? அதன் தோகையில் எவை இருக்கின்றன? அதன் கண்கள் எப்படி இருக்கும்? அதன் கழுத்து என்ன நிறம்? மயில் என்ன தின்னும்? மயில்களை எங்கே வளர்க்கிறார்கள்? மயில் இறகு எதற்கு உபயோகம்?

டிராயிங்.—மயிலின் தலை.

களிமண் வேலை.—மயிலின் மூக்கு.

பதங்கள்.—தோகையை—மின்னுகின்றன—நிறங்கள் — சுருங்கி — தானியங்களையும் — பணக்காரர்கள் — வளர்க்கிறார்கள் — விசிறி.

வியாசம்.—ஆண்மயிலுக்கும் பெண்மயிலுக்குமுள்ள வித்தியாசமென்ன?

Copy Form. மயிலைக்கண்டு வான்கோழி ஆடும்.



## 17. தட்டான்.

1. இது தட்டான் கடை. தட்டான் இங்கே பகல் முழுவதும் வேலை செய்வான். அவனோடு வேலை செய்பவன் அவன் தம்பி. அந்தத் தட்டான் நல்ல வேலைக்காரன். தங்க நகை வெள்ளி நகை எல்லாம் செய்வான். மோதிரங்கள், காப்பு, காசுமாலை முதலியவை செய்வான். இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறான்? நகை வியாபாரியின் மகள் கமலத்துக்கு ஒரு ஜோடி தங்கக் காப்புகள் செய்கிறான்.

2. கமலத்துக்கு வயது ஆறு. அவள் தகப்பனுக்கு அவளிடம் வெகு பிரியம். ஏன் தெரியுமா? மூன்று மாதத்திற்குமுன் பள்ளிக்கூட உபாத்தியாயர் வியாபாரியைக் கண்டு, "உங்கள்

மகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புங்கள்; நான் எழுதப் படிக்கக் கற்றுக்கொடுக்கிறேன். பெண் பிள்ளைகளுக்கு எழுதப் படிக்கத் தெரிவது அவசியமானது", என்று சொன்னார். உபாத்தியாயர் சொன்னது சரியென்று, அவன் நினைத்துத் தன் மகளை உடனே பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினான்.

3. ஒரு மாதத்திற்குள்ளாக, கமலம் எல்லா எழுத்துக்களையும் நன்றாகக் கற்றுக்கொண்டாள். பிறகு இரண்டு மாதத்தில் முதல் புஸ்தகத்தைப் படிக்கத் தெரிந்துகொண்டாள். அப்போது வியாபாரி தன் மகளைப் பார்த்து, "நீ இவ்வளவு சீக்கிரம் படிக்கக் கற்றுக்கொண்டபடியால் உனக்கு இப்போது தங்கக் காப்புச் செய்து போடுகிறேன்", என்றான். அப்படியே தட்டானிடம் அவளுக்காக, காப்புச்செய்யப் பொன் கொடுத்திருக்கிறான்.

4. சிறுவனுக்கு எதிரில் இருக்கிற சட்டியில் கரிபோட்டிருக்கிறது. அவன் ஊதி ஊதி நெருப்பை மூட்டுகிறான். தட்டான் பொன்னை நெருப்பில் போட்டுக் காய்ச்சுகிறான். காய்ச்சின பிறகு தட்டான் அதைப் பலவிதமாகத் தட்டி அடிப்பான். காய்ச்சின பொன் கைக்குச் சுடாதா? சுடாது. ஏனென்றால் காய்ச்சினவுடன் அதைத் தண்ணீரில் தோய்ப்பான். அப்போது அது குளிர்ந்துபோம்.

கேள்விகள்:—தட்டான் என்ன செய்வான்? அவன் எதனால் நகைகள் செய்வான்? இப்போது என்ன நகை செய்கிறான்? கமலத்துக்கு ஏன் காப்புப் பண்ணுகிறான்? சட்டி எதற்கு? அதில் என்ன இருக்கும்? நெருப்பை எப்படி ஊதுவான்? காய்ச்சின தங்கம் ஏன் சுடாது?

பதங்கள்.—மோதிரங்கள் — நகைவியாபாரி— தெரியாது — அனுப்பினான் — சிறுவன் — சுடாது—காய்ச்சு — தண்ணீர்.

வியாசம்.—மேற்கண்ட பதங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

Copy Form. பொன்னின் குணம் போமா பூவின் மணம் போமா.

## 18. மிட்டாய்க் கடை.

1. மிட்டாயில் அநேக விதம் உண்டு. நீ எத்தனை விதம் பார்த்திருக்கிறாய்? உனக்கு மிட்டாய்ப் பிடிக்குமா? இந்த மிட்டாய்க் கடையைப் பார்! எவ்வளவு நேர்த்தியாய் இருக்கிறது?

2. மிட்டாய், சர்க்கரையினால் செய்யப்படும். மிட்டாய் செய்வதற்குச் சர்க்கரையோடு பாலும் நெய்யும் வேண்டும். முந்திரிப்பருப்பும் தேங்காயும் சேர்ப்பது உண்டு. இந்தக் கடையில் ஜிலேபி, லட்டு, பால்மிட்டாய், அல்வா முதலிய அநேக வித தின்பண்டங்கள் இருக்கின்றன.

3. மிட்டாய் தின்பதற்கு உருசியாய் இருக்கும். ஆனால் அதை அதிகமாய்த் தின்னக்கூடாது. தின்றால் நோய் வரும். சர்க்கரை அதிகமாய்ச் சேர்ந்தால் உடம்பில் கொழுப்பு ஏறும்.

4. கடைக்காரன், கையில் தராசு வைத்திருக்கிறான். தராசினால் மிட்டாய் நிறுத்துக் கொடுப்பான். யாராவது மிட்டாய் வாங்கவந்தால் என்ன மிட்டாய் வேண்டும் என்று கேட்பான். விலையிலாவது மிட்டாயிலாவது அவன் ஒருவரையும் மோசம் செய்யமாட்டான். சிறு குழந்தை போனாலும் சரியாய்க் கொடுப்பான். அவன் செய்து வைத்திருக்கிற மிட்டாயில் நல்ல பொருள்களே



சேர்ந்திருப்பதால் எல்லாரும் அவனிடத்திலேயே வாங்குகிறார்கள். முதலில் அவன் மிகவும் ஏழையாய் இருந்தான். இப்போது பணம் சேர்த்திருக்கிறான். அவன் யோக்கியனாக இருப்பதால் எப்போதும் அவன் கடையில் கூட்டம் இருந்துக்கொண்டே யிருக்கும். இராத்திரி வேளையில் அவன் கடையில் நல்ல விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும்.

**கேள்விகள்:**—மிட்டாய் எதனாற் செய்யப்படும்? சில மிட்டாய்களின் பெயர் சொல்லு. ஏன் மிட்டாய் அதிகமாய்த் தின்னக்கூடாது? தராசின் உபயோகம் என்ன? கடைக்காரன் எவ்விதம் பணக்காரனானான்? கடையில் விளக்கு எதற்காக?

பதங்கள்.—பிடிக்குமா—சர்க்கரை—நோய்—கொழுப்பு — யோக்கியன் — நிறுத்து—தராசு.

வியாசம்.—நீ பார்த்த ஒரு பழக்கடையைப் பற்றி எழுதுக.

Copy Form. கடைக்குக்கடை ஆள் இருப்பான்.

## 19. குயவன்.

1. குயவன் பானை செய்வான். பானை களிமண்ணினால் செய்யப்படுகிறது. அவன் முதலில் நல்ல களிமண் கொண்டுவந்து ஊறவைப்பான். பிறகு கொஞ்சம் மணலை நன்றாய்க் கலந்து மிதித்துப் பதப்படுத்துவான்.

2. அந்த மண்ணில் கொஞ்சம் எடுத்துச் சக்கரத்தின்மேல் வைப்பான். சக்கரத்தின் சமீபத்தில் ஒரு சிறு மணையில் உட்கார்ந்துகொண்டு, சக்கரத்தைக் கையினால் சுற்றுவான். கழியினாலும் சுற்றுவதுண்டு. சக்கரம் சுழலும்போது மண்ணைக் கையாற் பிடித்து, பானை, சட்டி முதலியவைகள் செய்வான். படத்தில் என்ன என்ன இருக்கின்றன பாருங்கள்.

3. குயவன் சட்டி, குடம், பானை, மடக்கு முதலிய பலவிதமான பாத்திரங்கள் செய்வான். இதோ ஒரு சட்டி செய்கிறான் பார். சில பாத்தி ரங்கள் பெரியவைகளாக இருக்கும். சில சிறிய வைகளாக இருக்கும். சிலவற்றிற்கு வாய் அக லம்; சிலவற்றிற்கு வாய் குறுகல். சில உயரமாக வும் சில குட்டையாகவும் இருக்கும்.



4. பாத்திரங்களைச் செய்த பிறகு அவைகளை நிழலில் உலர வைப்பான். உலர்ந்தபின் காவி தடவிச் சுடுவான். சுட்ட பாத்திரம் சிவப்பாக வும் கெட்டியாகவும் இருக்கும். பச்சையாயிருக் கும் சட்டியில் நீர் வார்த்தால் அது கரைந்து போம்.

5. மண் பாத்திரத்தில் தண்ணீர் வைத்தால் குளிர்ந்திருக்கும். மண் சட்டிகளில் சமைக்கும் ஆகாரம் உடம்புக்கு நல்லது.

கேள்விகள்:—சில மண் பாத்திரங்களின் பெயர் சொல்லு. என்ன மண்ணினால் இவை செய்யப்படும்? இவை செய்பவன் யார்? சக்கரத்தை எப்படிச் சுழற்றலாம்? மண்ணைப் பல உருவங்களாக எப்படிச் செய்கிறான்? சட்டி செய்தபிறகு என்ன செய்யவேண்டும்? சட்டிகளை ஏன் சுட வேண்டும்? பானைகளில்வைத்த தண்ணீர் எப்படி இருக்கும்.

டிராயிங்.—பானை.

களிமண் வேலை.—சட்டி.

பதங்கள்.—குயவன் — சேர்த்து—சக்கரம்— சுற்றலாம் — தரையில் — சிறிய வை— சிவப்பாய்—கரைந்து.

வியாசம்.—மேற்கண்டபதங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

Copy Form. பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டுமோ?

## 20. கர்வம்.

1. ஒரு குயவன் சட்டி, பானை, மடக்கு, குடம், அடுப்பு, ஜாடி முதலியவைகள் செய்து கடைவீதிக்கு அவற்றை விற்கக் கொண்டுபோனான். அங்கே போய் அவன் அவைகளை வரிசையாய் வைத்தான்.

2. அப்போது ஜாடி, சட்டியைப்பார்த்து, ‘சட்டியே, நீ எதற்கு உதவுவாய்? உனக்கு என்ன பெருமை? ஏழைகள் உன்னை வாங்கிக்கொண்டு போய் அடுப்பில் வைத்துக் கரியாக்கிச் சீக்கிரத்தில் உன் அழகைக் கெடுக்கப்போகிறார்கள். என்னையோ பணக்காரர்கள் வாங்கி, நெய் முதலியவை வைத்து, ஜாக்கிரதையாய்க் காப்பாற்றுவார்கள். நான் எவ்வளவு அழகாயிருக்கிறேன் பார்’ என்று பெருமை பாராட்டிற்று.

3. உடனே சட்டி, ‘நீ ஏன் கர்வம் அடைகிறாய்? நீயும் நானும் ஒரே குழியில் இருந்த மண். இருவரும் ஒரே இடத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டோம். ஒரே தண்டசக்கரத்தால் சுழன்றோம். ஒரே குயவனால் செய்யப்பட்டோம். ஒரே சூளையில் வெந்தோம். இப்போதும் ஒரே இடத்தில் தான் இருக்கிறோம். உடைந்தால் இருவரும் வெளியே எறியப்படுவோம். உனக்கும் எனக்கும் உருவத்தில்தான் வித்தியாசம். உருவத்தினால் கர்வம் அடையாதே’ என்று சொல்லிற்று.

4. பிறகு ஒரு பெண் அங்கே ஜாடிவாங்க வந்து அதை எடுத்துத் தட்டிப் பார்த்தாள். அது கனமாய் இருந்தபடியால் கனம் தாங்காமல் நழுவவிட்டாள். உடனே அது கீழே விழுந்து உடைந்தது. அதை எடுத்து எறிந்து விட்டுப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போனாள்.

நாம் கர்வம் அடையக்கூடாது.

கேள்விகள்:—குயவன் கடைக்கு என்ன என்ன கொண்டுபோனான்? ஜாடி சட்டியைப் பார்த்து என்ன சொல்லிற்று? சட்டி அதற்கு என்ன பதில் உரைத்தது?

பதங்கள்.—வரிசையாய்—கௌரவம்—பண்டங்கள் — ஜாக்கிரதையாய் — தண்டசக்கரம் — வித்தியாசம்— தாங்காமல் — அகங்காரம்.

வியாசம்.—இந்தக் கதையைச் சுருக்கிச் சொல்லுக.

Copy Form. அகங்காரம் அழிதலுக்கு முன்வரும்.

## 21. உறவினர்.

கோபாலன்: அங்கே இருக்கும் பெரியவர் யார் தெரியுமா?

நாராயணன்: எனக்குத் தெரியவில்லையே, யார் அவர்?

கோ: அவர் கிருஷ்ணபிள்ளை; அவர் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவள் சீதாலக்ஷ்மி.

நா: அந்த ஸ்திரீக்கும் அவருக்கும் என்ன உறவு?

கோ: இது தெரியாதா! அவள் தான் அவர் மனைவி.

நா: பக்கத்தில் நிற்கிற பெண் யார்?

கோ: அவள் தான் அவர்கள் மகள் காமாக்ஷி. அவர்கள் அவளுக்குத் தாய் தந்தையர்கள். தாய் தந்தையர்களைப் பெற்றோர் என்றும் சொல்லுவதுண்டு.

நா: அவர்களுக்கு ஒரே பிள்ளை தானா?



கோ: இல்லை. அவர்களுக்கு இரண்டு பெண்களும் மூன்று பிள்ளைகளும் இருக்கிறார்கள். மூத்தவன் கோவிந்தன். பட்டணத்தில் உத்தியோகம் செய்கிறான். அவனுக்குக் கலியாணம் ஆய்விட்டது. அவன் மனைவியின் பெயர் ருக்குமணி. அவள் அங்கே அவனோடு வாழ்ந்துகொண்டிருக்கிறாள். இந்தப் பெரியோர்களுக்கு அவள் மருமகள். இவர்கள் அவளுக்கு மாமனாரும் மாமியாரும் ஆவார்கள். இரண்டாவது பிள்ளையின் பெயர் சேஷாசலம். அவன் பள்ளிக்கூடம் போயிருக்கிறான். மூன்றாவது பிள்ளை

கேசவனைத் தாய் மடியில் வைத்திருக்கிருள். மீனுக்ஷி என்பது தரையில் உட்கார்ந்திருக்கும் பெண்ணின் பெயர். இவளுக்குக் கலியாணமாக வில்லே. இவள் அக்காள் காமாக்ஷிக்குக் கலி யாணமாகிவிட்டது. அவள் புருஷன் மதுரை யில் இருக்கிருன். அவன் பெயர் சொக்கநாதன். அவன் இந்தப் பெரியவர்களுக்கு மருமகன். அவன் அத்தை வீட்டில் இருக்கிருன்.

நா : அத்தை என்ருல் யார்?

கோ : தகப்பனேடு பிறந்தவள்.

நா : தகப்பனுடைய தம்பியை என்ன வென்று சொல்லுகிறது?

கோ : அவனைச் சிற்றப்பன் என்று கூப்பிடு கிறது. இதுகூடத் தெரியாதா?

நா : தாயுடன் பிறந்தவர்களுக்கு என்ன பெயர்?

கோ : புருஷனை மாமன் என்றும், பெண் பிள்ளையை, சிற்றம்மை அல்லது பெரியம்மை என்றும் கூப்பிடவேண்டும்.

நா : தாயைப் பெற்றவன் பாட்டன் அல்ல வா ?

கோ : ஆமாம்; தாய் தந்தையர்களைப் பெற்ற வர்கள் பாட்டனும் பாட்டியும் ஆவார்கள்.

நா : இப்போது உறவெல்லாம் தெரிந்து கொண்டேன். ஒரு குடும்பத்தில் பாட்டன், பாட்டி, தகப்பன், தாய், மகன், பெண், தமக்கை, தங்கை, அண்ணன், தம்பி, மருமகன், மருமகள்,

அத்தை, சிற்றப்பன், மாமன், சிற்றம்மை, பெரியம்மை முதலியவர்கள் இருக்கிறார்கள்.

பதங்கள். — பெற்றோர் — மருமகள் — மாமனார் — மாமியார் — மைத்துனன் - சிற்றம்மை — குடும்பம் — பாட்டன்.

வியாசம். — மேற்கண்ட பதங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சிறுவாக்கியத்தில் அமைத்து எழுதுக.

Copy Form. நப்போல் வளை.

## 22. ராமாயணம்.

1. வட இந்தியாவில் அயோத்தி என்ற ஒரு பட்டணம் உண்டு. அதனை வெகு நாளைக்குமுன் ஓர் அரசர் ஆண்டு வந்தார். அவர் மிகவும் நல்லவர். அவர் பெயர் தசரதர். அவருக்கு மூன்று மனைவிகள். அவர்களிடமாக அவர் நான்கு பிள்ளைகளைப் பெற்றார். அவர்களில் மூத்தவர் பெயர் ராமர். அவர் மிகவும் தைரியமுள்ளவர் பெற்றோர் சொல்லைக் கேட்பவர்.

2. தசரதருடைய மூன்றாவது மனைவி (கைகேயி) தன்னுடைய மகன் பரதனுக்கே பட்டம் கட்டவேண்டுமென்று நினைத்தாள். ஆகையால் ராமரை 14 வருஷம் காட்டில் வசிக்கவேண்டும் என்று சொன்னாள்.

3. உடனே ராமர் தம் மனைவி சீதையுடனும்



தம்பி லட்சுமணனுடனும் காட்டிற்குப் போய்

விட்டார். அங்கே எல்லாரும் விநோதமான செடி கொடிகளையும், பட்சிகளையும், மிருகங்களையும் பார்த்து ஆனந்தமாக இருந்தார்கள். தாங்கள் குடியிருக்க ஒரு குடிசை கட்டிக்கொண்டார்கள். காய், கிழங்கு, பழம் இவற்றையே சாப்பிட்டு வந்தார்கள்.

4. ராமர் காட்டுக்குப் போனது பரதனுக்குத் தெரியாது. இதை அறிந்தவுடன் ராமரை அயோத்திக்கு அழைத்துவரக் காட்டுக்குச் சென்றான். அங்கே ராமரைக் கண்டு பிடித்து, அவரைத் தன்னுடன் வரும்படி வேண்டினான். ராமர் நாட்டிற்குச் செல்ல சம்மதிக்கவில்லை. ஆகையால் பரதன் ராமருடைய பாதரக்ஷைகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு நாட்டிற்குக்கொண்டு வந்தான். அயோத்தியில் அப்பாதரக்ஷைகளுக்குப் பட்டம்கட்டி, பூஜை செய்து, ராமர் பெயரால் ராஜ்யத்தை அரசாண்டு வந்தான்.

5. ஒருநாள் ராமரும் லட்சுமணனும் இல்லாத சமயம் பார்த்து, சீதையை ஒரு ராட்சஸன் தூக்கிக்கொண்டு போய்விட்டான். அவன் பெயர் இராவணன். அவன் ஊர் இலங்கை. அந்த ஊர் கடலின் நடுவில் இருக்கிறது. சீதையை அவன் இலங்கைக்குக்கொண்டுபோய் விட்டான்.

6. குடிசைக்குத் திரும்பி வந்து பார்த்த போது சீதை அங்கே இல்லாமையால் ராமர் மிகவும் வருத்தமுற்றார். பிறகு அவரும் தம்பியும் தேடினார்கள். அனுமார் என்பவரால் அவள் இலங்கையில் இருப்பதாக அறிந்துகொண்டார்கள். பிறகு பல வானரங்களின் உதவியால் இலங்கைக்குப் போய் இராவணனைக் கொன்று

சீதையை மீட்டு வந்தார்கள். இதற்குள் 14-வருஷகாலம் ஆயிற்று. எல்லோரும் அயோத்திக்குத் திரும்பினார்கள். ராமருக்கு அங்கே பட்டாபிஷேகம் ஆயிற்று. பிறகு அவர் ஜனங்களிடம் அதிக அன்பு பாராட்டி ராஜ்யத்தை ஆண்டு வந்தார்.

கேள்விகள்:—அயோத்தி அரசனுக்கு எத்தனை மனைவிகள்? மூன்றாவது மனைவியின் பிள்ளைக்கு என்ன பெயர்? ராமர் மனைவியை எடுத்துப் போனது யார்? அதைத் தெரிந்து வந்தவர் யார்?

பதங்கள்.— லட்சுமணன் — இராவணன்— இலங்கை—பரதர்—ஹநுமார்— பட்டாபிஷேகம்—ராட்சஸன்— கொன்று—பாதரக்ஷை.

வியாசம்.—ராமர் சரித்திரத்தைச் சுருக்கிச் சொல்லுக.

Copy Form. தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை.

# 23. அவயவங்கள் சொல்லிய கதை.

முதல் பாகம்.

1. பிள்ளைகளே என்னைப் பாருங்கள். நான் எவ்வளவு பளபளப்பாய் இருக்கிறேன்! நான் யார்? என் பெயரென்ன தெரியுமா? என்னைத்

தான் கண் என்பார்கள். நான் கண்ணாடிக் கோலி



யைப்போல் இருக்கிறேன். நான் ஒரு பள்ளமான வீட்டில் இருக்கிறேன். எனக்கு இரண்டு காவல்காரர்கள் உண்டு. அவர்கள் எனக்கு கெடுதி வராதபடி காப்பாற்றுகிறார்கள். அவர்களில் ஒருவன் எனக்குக் கீழே இருக்கிறான். மற்றவன் மேலே இருக்கிறான். கீழே இருப்பவன் அசையாமல் ஒரே இடத்தில் இருந்துகொண்டு என்னைக் காப்பாற்றுகிறான். மேலே இருப்பவன் அடிக்கடி அசைந்து கீழே இருப்பவனைத் தட்டி ஜாக்கிரதைப் படுத்துகிறான். அவர்கள் யாரென்று நீ நினைக்கிறாய்? அவர்களை இமைகள் என்பார்கள். இமையின் மயிர்கள் என்மேல் தூசி விழாதபடி காக்கின்றன. நீ என்னை உற்றுப்பார். உன் உருவத்தை எனக்குள்ளே பார்ப்பாய். நான் அவயவங்கள் எல்லாவற்றிலும் சிறந்தவன். கண்ணில்லாதவன் குருடன்.

2. பேஷ்பேஷ் நன்றாயிருக்கிறது. என் அழகுக்கு இந்தக் கண் ஈடாமா? நான் இல்லாவிட்டால் முகத்திற்கு அழகு எது?



என் வீட்டிற்கு இரண்டு வழிகள் உண்டு; அவற்றின் மூலமாய் மூச்சை வாங்கி விடுகிறேன். நானே நல்ல காற்றை உள்ளே இழுத்துக் கெட்ட காற்றை வெளியே விட்டு உயிரைக் காப்பாற்றுகிறேன். நான் இல்லாவிட்டால் உயிர் நில்

லாது. என் வீட்டிற்கு உள்ள இரண்டு வழிகள் என்ன தெரியுமா? அவைகளே மூக்குத் துவாரங்கள். நான் வாய்க்குமேல் உட்கார்ந்திருக்கிறது எதற்காக என்று எண்ணுகிறாய்? வாயில் போடும் பதார்த்தங்கள் நல்லவை அல்லது கெட்டவை என்று தெரிந்து சொல்வதற்காகத்தான். ஆகையால் நானே முக்கியமானவன்.

கேள்விகள்:—கண் எதைப்போலிருக்கிறது? கண்ணைக் காப்பாற்றுகிறவை எவை? கண்ணில்லாதவனை எவ்விதமாக நாம் அழைப்போம்? மூக்கு ஏன் வாய்க்குமேல் இருக்கிறது?

பதங்கள்.—பளபளப்பு — கண்ணாடிக்கோலி- அசையாமல்—இமைகள்—அவயவங்கள் — மூக்குத்துவாரம் — பதார்த்தங்கள்.

வியாசம். — மேற்கண்ட பதங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சிறுவாக்கியத்தில் அமைத்து எழுதுக.

Copy Form. கண்கண்டது கை செய்யும்.

## 24. அவயவங்கள் சொல்லிய கதை.

இரண்டாம் பாகம்.

1. ஓ, ஓ, நான் இருக்கிறேனென்ற ஞாபகம் இல்லையோ? நான் அவர்களைவிட உருவத்தில் பெரியவன். அன்றியும் நான் மிகவும் பலசாலி.

TB 031(2) N24

என்னைப்போல் பலமுள்ள அவயவம் எது? நான் இல்லாவிட்டால் மற்றவைகளால் என்ன செய்ய முடியும்? ஒவ்வொரு அவயவத்திற்கும்



நான் உதவி செய்கிறேன். ஆகாரத்தை எடுத்து வாயில் போடுகிறேன். பொருள்களை வாசனை பார்க்க மூக்கினிடம் கொண்டுபோகிறேன். கண்களில் தூசி விழுந்தால் எடுக்கிறேன். உடம்பில் தினவெடுத்தால் சொறிகிறேன். அவயவங்களைச் சுத்தமாய் அழுக்கு இல்லாமல் தேய்ப்பவனும் நானே. எடுப்பதற்கும், எழுதுவதற்கும், அலங்கரிப்பதற்கும் இன்னும்பல வேலைகள் செய்வதற்கும்நானே உதவுகிறேன். நான் வேலை செய்யாவிட்டால் மற்றவைகளுக்கு ஆகாரம் கிடைப்பது ஏது?

84547

2. என்னிடம் சுண்டுவிரல், மோதிரவிரல், நடுவிரல், ஆள்காட்டிவிரல், பெருவிரல், என்று ஐந்து சேவகர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஒருநாள் சண்டையிட்டுக்கொண்டு என்னிடம் வந்தார்கள். நான் அவர்களுடைய வழக்கை விசாரித்தேன். சுண்டுவிரல், 'நானே பாக்கியசாலி; சுவாமியைக் கும்பிடும்போது நானே முன்நிற்பவன்' என்றது. மோதிரவிரல், 'ரத்தின மோதிரங்கள் பூட்டப்பட்டு அழகாயிருப்பவன் நான்தான்' என்றது. நடுவிரல், 'எல்லோரையும் விட உயரமானவன் நான்தான்' என்றது. ஆள்காட்டி விரல், 'ஒவ்வொன்றையும் சுட்டிக் காட்டுபவன் நானே' என்றது. கட்டைவிரல், 'எல்லோரைக் காட்டிலும் பலசாலி நானே' என்றது. இவற்றைக் கேட்டு நான், "ஒவ்வொரு

வருக்கும் ஒவ்வொரு தொழில் இருக்கிறது; ஆகையால் எல்லோரும் சமானமானவர்களே'' என்று சொல்லி அனுப்பினேன்.

3. பத்து வந்தாலும் பதட்டமாகாது. அஞ்சு வந்தாலும் அவசரமாகாது. பேசும்போது யோசித்துப் பேசவேண்டும். நான் எல்லோரையும்விட உயரமாயும், பருமனாயும், பலமாயும் இருந்தும் என்னை மறந்து போகலாமா? நான் அல்லவோ எல்லோரையும் சுமந்து போகிறவன்? நானில்லா விட்டால் இவர்கள் இருக்கிற இடத்திலிருந்து நகரமுடியுமா? உடம்பில் பாதி உயரம் நான் இருக்கிறேன். உங்கள் கையால் அளந்து பாருங்கள். நான் நாலு சாண் உயரம். மற்றப் பாகம் நாலு சாண். என் பாதங்களைப் பாருங்கள். அவைகளே நம்மை விழவொட்டாமல் காப்பவை. ஒவ்வொரு பாதத்திலும் ஐந்து விரல்கள் உண்டு. அவைகளுக்குத் தீங்கு உண்டாகாதபடி ஒவ்வொன்றின் நுனியில் நகம் இருக்கிறது. கால் இல்லாதவன் நொண்டி. நானே மேலானவன்.



கேள்விகள்:—கையினால் என்ன பிரயோஜனம்? காலினால் என்ன உபயோகம்? காலில்லாதவனை என்ன வென்கிறோம்?

பதங்கள்.—பலசாலி — அலங்கரிப்பது — சுண்டுவிரல் - ரத்தினமோதிரம்- சமானமானவர்—சுட்டிக்காட்டு- பதட்டமாகாது.

வியாசம்.—தான் மேலானவன் என்பதற்குக் கால் சொன்னகாரணங்கள்என்ன?

Copy Form. கை பட்டால் கண்ணாடி.

# 25. தொழில்கள்.

1. முருகப்ப ரெட்டியார் என்பவர் காவனூர் ஜமீன்தார். அரசன் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக, அவர் தம் ஊரிலுள்ள எல்லோரையும் வருவித்தார். எல்லோரும் வாத்தியம் வாசித்துக்கொண்டு அரசன் படத்தை அலங்கரித்துக் கிராமத்தைச் சுற்றி வந்தார்கள்; ஏழைகளுக்குச் சாப்பாடு போட்டார்கள்; பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு மிட்டாய் பொட்டலங்கள் கொடுத்தார்கள்; பிறகு எல்லோரும் கிராமச் சாவடியில் கூடினார்கள். அப்போது ரெட்டியார் எழுந்து தொழிலாளிகளைப் பார்த்து, 'உங்களில் முக்கியமான தொழில் செய்பவன் எவனோ அவனுக்கு இந்தப் பத்து ரூபாயை வெகுமதியாகக் கொடுக்கப்போகிறேன்' என்று பத்து ரூபாயை எடுத்து மேஜையின்மேல் வைத்தார்.

2. முதலில் வீரப்பன், எழுந்து, 'பிரபுவே!



நான் குடியானவன்; நிலத்தை உழுது எரு அடித்துப் பல தானியங்களைப் பயிரிட்டு ஜனங்களைக் காப்பாற்றுகிறேன். நானில்லாவிட்டால் தின்னச் சோறும், உடுக்கத் துணியும், நெய்வதற்குப் பஞ்சும் கிடைக்குமா? ஆகையால் என் தொழிலே மேலானது' என்றான்.

3. பிறகு கோபாலன், 'ஐயாவே! நான் இடையன். ஆடுமாடுகளை மேய்த்து ஜனங்களுக்குப் பால், தயிர், நெய் முதலியவற்றைக் கொடுக்கிறேன். குளிர் காலத்தில் போர்த்துக்கொள்ளும் கம்பளம் நெய்வதற்கு வேண்டிய ஆட்டு மயிர் என்னாலேயே கிடைக்கிறது' என்றான்.



4. கூட்டத்திலிருந்த கிருஷ்ணன் எழுந்து, 'ஐயனே! நான் தச்சன். உளி, வாள், இழைப்புளி முதலியவை என் ஆயுதங்கள். நான், உழவுக்கு வேண்டிய கருவிகள் செய்து கொடுக்கிறேன். நான் இல்லாவிட்டால் வீடு கட்டுவது எப்படி? நீங்கள் உட்கார்ந்திருக்கும் நாற்காலி எங்கிருந்து வரும்? நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை வைக்கப் பெட்டியும், சுகமாய்ப் படுக்கக் கட்டிலும் நான் அல்லவோ செய்கிறேன்!' என்றான்.



5. கந்தன் எழுந்து, 'அப்பனே! நான் கருமான். தச்சன் பெட்டி செய்து விட்டால் அதற்குப் பூட்டுப் போடுவது யார்? கட்டிலுக்கு ஆணி செய்பவன் யார்? நானே. நான் பூட்டுச் செய்யாவிட்டால் பொருள்கள் எப்படி பத்திரமாயிருக்கும்? குடியானவனுக்கு மண்வெட்டி முதலிய கருவிகள் செய்து கொடுக்கிறவன் நான். மற்றத் தொழிலாளிகள் எல்லோருக்கும் ஆயுதங்கள் செய்து கொடுக்கிறவன் நானே' என்றான்.



6. கேசவன், 'ஆண்டவனே! நான் குயவன். மண் பாண்டங்கள் செய்து உங்களுக்குச் சமையல் முதலிய வேலைகளுக்குக் கொடுக்கிறேன்' என்றான்.

7. சுப்பன், 'பிரபுவே! நான் தட்டான். தங்கம் வெள்ளி முதலியவற்றால் காப்பு, கொலுசு, காசுமாலை, காரை, கண்டி முதலிய நகைகள் செய்து கொடுக்கிறேன். நானல்லவோ நீங்கள் போட்டிருக்கும் கடுக்கனும் மோதிரமும் செய்தேன்? நானில்லாவிட்டால் உங்கள் வீட்டு பெண்களுக்கு நகை ஏது?' என்றான்.

8. வேலன், 'ஐயா! நான் கன்னான். பித்தளை தாம்பிரம், வெண்கலம் இவற்றால் உங்களுக்கு வேண்டிய பாத்திரங்கள் செய்து கொடுக்கிறேன்' என்றான்.



9. சோமநாதன், 'ஐயா! நான் தையற்காரன். உங்களுக்கு வேண்டிய உடுப்புக்களைத் தைத்துக் கொடுக்கிறேன்' என்றான்.



10. நாராயணன், 'பிரபுவே! நான் ஓர் உபாத்தியாயன். பிள்ளைகளுக்கு நான் படிப்புச் சொல்லிக் கொடுக்கிறேன். படித்தால் புத்தி உண்டாகிறது. இது மிகவும் அவசியம் அல்லவா?' என்றான்.

11. காத்தான், 'ஆண்டவனே! கும்பிடுகி



றேன்; நான் ஒரு சக்கிலி. செருப்பு, ஏற்றத்திற்கு வடம், குதிரைக்குக் கடிவாளம், மேளத்திற்குத் தோல் முதலியவை நான்தான் செய்து கொடுக்கிறேன்' என்றான்.

12. ரெட்டியார், அவர்கள் எல்லாரும்சொன்னதைக்கேட்டு, 'நீங்கள் எல்லாரும் அவசியமானவர்களே. ஒவ்வொருவரும் உபயோகமுள்ளவர்களாய் இருக்கிறீர்கள். ஆகையால் இந்த ரூபாயை ஆளுக்கு ஒன்றாய் பங்கிட்டுக் கொடுக்கிறேன்' என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரூபாய் வீதம் கொடுத்தார். எல்லாரும் அவரை வாழ்த்திவிட்டு வீடு சென்றார்கள்.

பதங்கள்.—ஜமீன்தார்-கொண்டாட - தொழிலாளிகள்— குடியானவன்—கம்பளம் — இழைப்புளி — கருவிகள் —வெண்கலம்.

வியாசம்.-தொழிலாளிகளைப்பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.

# 26. யானை.

1. பூமியில் உள்ள பிராணிகள் எல்லாவற்றிலும் பெரியது யானை. நீ யானையைப் பார்த்திருக்கிறாயா? இங்கே படத்தில் இருப்பது தான் யானை.

2. யானையின் காது, கால், தலை முதலிய அவயவங்கள் எல்லாம் மிகவும்பெரியவை. ஆனால் அதனுடைய கண் மட்டும் மிகவும் சிறியதாக இருக்கும். யானையின் வாயிலிருந்து நீளமாகத் தொங்கிக்கொண்டிருக்கும் அவயவத்துக்கு, துதிக்கை என்று பெயர். யானைக்கு எந்தக் காரியத்தையும் செய்வதற்கு துதிக்கைதான் நம்முடைய கையைப்போல் உதவும்.



3. யானை துதிக்கையால் ஆகாரத்தை எடுத்து வாய்க்குள்ளே போட்டுக் கொள்ளும். தாகம் எடுக்கும்போது துதிக்கையில் தண்ணீரை நிரப்பிக்கொண்டு வாய்க்குள்ளே வைத்து உறிஞ்சும்.

4. ஆண் யானைக்கு வாயின் இரண்டு பக்கங்களிலும் நீண்ட தந்தங்கள் உண்டு. தந்தம் வெள்ளையாகவும், கெட்டியாகவும், வழுவழுப்பா

கவும் இருக்கும். யானையின் தந்தம் மிகுந்த விலையுள்ளது.

5. யானை மிகவும் பலமுள்ள பிராணி. அது பாரமான சுமைகளையும், பெரிய மரங்களையும் சுமந்து செல்லும். யானைகளை அரண்மனைகளிலும், கோவில்களிலும் வைத்திருப்பார்கள். திருவிழாகாலங்களில் சுவாமிக்கு முன்னே யானை செல்லும். எப்போதும் யானை அசைந்துகொண்டே இருக்கும்.

6. யானைக்காரனுக்கு மாவுத்தன் அல்லது பாகன் என்று பெயர். அவன்தான் யானைக்குத் தீனி கொடுப்பான். அவன் சொல்லுகிறபடியெல்லாம் அது செய்யும்.

7. யானைகள் காடுகளில் வசிக்கும். மரங்களிலிருந்து இலைகளைப் பிடுங்கித் தின்னும். யானைக்குக் கரும்பு மிகவும் பிரியமானது.

கேள்விகள்:—யானையின் கண் எப்படியிருக்கும்? துதிக்கை என்பது என்ன? யானைக்காரனுக்கு என்ன பெயர்? யானைகள் எங்கே இருக்கும்? யானை எப்போதும் என்ன செய்துகொண்டிருக்கும்?

டிராயிங்.—துதிக்கை.

களிமண் வேலை—தந்தம்.

பதங்கள்:—பெரியது—துதிக்கை—தாகம்—ஊற்றிக்கொள்ளும் —தந்தங்கள் — விலைபெற்றது — வளர்ப்பார்கள் — மாவுத்தன் — தீனி — பழக்குகிறார்கள்.

வியாசம்.—மேற்கண்ட பதங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

Copy Form. யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.

# 27. யானையின் கதை.

1. வெகு காலத்துக்கு முன்னே தஞ்சாவூர் அரண்மனையில் ஒரு பெரிய யானை இருந்தது. அந்த யானையின்மேல் பாகன் ஏறிக்கொண்டு ஒவ்வொரு நாளும் ஆற்றுக்குப் போய் அதற்குத் தண்ணீர் காட்டி வருவான்.

2. யானை போகும்போது, வழியில் யாராவது வாழைப்பழம், தேங்காய், கரும்பு இவைகளை அதனிடம் கொடுப்பார்கள். அவர்கள் கொடுப்பதை யானை, தன் துதிக்கையை நீட்டி மிகவும் சந்தோஷமாக வாங்கிக்கொள்ளும். அவர்கள் கொஞ்சமும் பயமில்லாமல் அதைத் தடவிக் கொடுப்பார்கள். அது ஒன்றும் செய்வதில்லை.

3. ஒரு நாள் துஷ்டப் பையன் ஒருவன், ஒரு தேங்காயை உடைத்து உள்ளே இருந்த தேங்காயைக் கீறி எடுத்து அதற்குள் சுண்ணாம்பு, களிமண், மணல், குண்டூசி இவைகளையெல்லாம் வைத்து மூடி ஒரு தேங்காயைப்போல் செய்து யானை எப்பொழுது வருமென்று காத்துக் கொண்டிருந்தான்.

4. வழக்கம் போலவே யானை அந்தப் பையன் இருக்கும் தெருவழியாக வந்தது. உடனே சிறுவன், தான் வைத்திருந்த தேங்காயை அதனிடம் கொடுத்தான். யானை மிகவும் பிரியமாக அதை வாங்கி வாய்க்குள்ளே போட்டுக்கொண்டதும், பையனுடைய துஷ்டத்தனம் அதற்குத் தெரிந்துவிட்டது. ஆனாலும் அது கோபத்தைக் காட்டாமல் அந்தத் தேங்காயை

வாய்க்குள்ளேயே ஒரு மூலையில் அடக்கி வைத்துக்கொண்டது. அன்று முதல் யானையைக் கண்டால் பையன் ஒளிந்துகொள்வான்.

5. நாலைந்து வருஷங்கள் ஆனபிறகு கோவிலில் திருவிழா நடந்தது. சுவாமிக்கு முன்னே அந்த யானைபோய்க்கொண்டிருந்தது. வேடிக்கை பார்க்க அநேகம் சிறு பிள்ளைகள் அதன் சமீபமாகப் போனார்கள்.



6. அப்போது அந்தத் துஷ்டப் பையன், தான் முன்பு செய்ததை யானைமறந்திருக்குமென்றும், தன்னை அது அடையாளம் கண்டு பிடிக்காதென்றும் நினைத்து, அதன் அருகில் போனான். யானை உடனே அவனை எப்படியோ கண்டுபிடித்து, தான் வாய்க்குள் வைத்திருந்த தேங்காயை அவன்மேல் பலமாக வீசி எறிந்தது.

அதனால் அவனுக்குப் பலமான காயம் உண்டாகி ஒரு வருஷம் வரையில் அவன் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான். ஒவ்வொருவரும் அதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தார்கள்.

கேள்விகள்:—யானைப் பாகன் யானையை எங்கே கொண்டு போவான்? வழியிலுள்ளவர்கள் யானைக்கு என்ன கொடுப்பார்கள்? துஷ்டப்பையன் என்ன செய்தான்? யானை என்ன செய்தது?

பதங்கள்:—ஏறிக்கொண்டு — ஆற்றுக்கு—நீட்டி-உடைத்து-சுண்ணாம்பு-துஷ்டத்தனம் —மூலை—வேடிக்கை— அடையாளம்— கண்டு பிடித்து—திருவிழா.

வியாசம்.—இக்கதையைச் சுருக்கி எழுதுக.

Copy Form. கேடுவோன் கேடு நினைப்பான்.

# 28. நீதிகள்.

1. மன்னர்க்கு அழகு செங்கோல் முறைமை.
2. மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல்.
3. உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்.
4. அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்.
5. அடக்கம் ஆயிரம் பொன் தரும்.
6. தருமம் தலைகாக்கும்.
7. அதிக ஆசை அதிக நஷ்டம்.
8. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
9. ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்.
10. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
11. இல்லாதவன் பொல்லாதவன்.
12. உப்பு இட்டவரை உள்ளளவும் நினை.
13. உலகம் பலவிதம்.
14. ஊருடன் கூடிவாழ்.
15. புத்திமான் பலவான்.
16. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே;
சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

# உலகநீதி.

1. மாதாவை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

2. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்கவேண்டாம்.

3. அஞ்சாமல் தனிவழியே
போகவேண்டாம்.

4. அடுத்தவரை ஒருநாளும்
கெடுக்கவேண்டாம்.

5. தனம்தேடி உண்ணாமல்
புதைக்கவேண்டாம்.

6. தருமத்தை ஒருநாளும்
மறக்கவேண்டாம்.

7. கோயில்இல்லா ஊரில்
குடியிருக்கவேண்டாம்.

8. மூத்தோர்சொல் வார்த்தைகளை
மறக்கவேண்டாம்.

9. எளியாரை எதிரிட்டுக்
கொள்ளவேண்டாம்.

10. தெய்வத்தை ஒருநாளும்
மறக்க வேண்டாம்.

ஔவையார் அருளிச்செய்த

# ஆத்தி சூடி.

1. அறம்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. ஈவது விலக்கேல்.
4. உடையது விளம்பேல்.
5. எண் எழுத்து இகழேல்.
6. ஏற்பது இகழ்ச்சி.
7. ஐயம் இட்டு உண்.
8. ஒதுவது ஒழியேல்.
9. கண்டுஒன்று சொல்லேல்.
10. சனி நீராடு.
11. தந்தைதாய்ப் பேண்.
12. நன்றி மறவேல்.
13. பருவத்தே பயிர்செய்.
14. வஞ்சகம் பேசேல்.
15. இளமையில் கல்.
16. கீழ்மை அகற்று.
17. குணமது கைவிடேல்.
18. கூடிப் பிரியேல்.
19. கெடுப்பது ஒழி.
20. கொள்ளை விரும்பேல்.
21. சக்கர நெறி நில்.
22. சேரிடம் அறிந்து சேர்.
23. சோம்பித் திரியேல்.

24. தெய்வம் இகழேல்
25. தேசத்தோடு ஒத்துவாழ்
26. நீர் விளை யாடேல்
27. நூல் பல கல்
28. நோய்க்கு இடங்கொடேல்
29. பாம்பொடு பழகேல்
30. பெரியாரைத் துணைக்கொள்
31. மனம் தடுமாறேல்
32. மூர்க்கரோடு இணங்கேல்
33. மேன்மக்கள் சொற்கேள்
34. வல்லமை பேசேல்
35. ஊருடன் கூடிவாழ்

## பழமொழிகள்.

(முதல் பாகம்)

1. அதிக ஆசை அதிக நஷ்டம்.
2. ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு.
3. இடுவது பிக்ஷை பெருவது மோக்ஷம்.
4. ஈயார் உடமைத் தீயார் கொள்வர்.
5. உயர்ந்த உடுப்பு அயர்ந்த அடுப்பு.
6. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.
7. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
8. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.
9. ஐந்தில் வராதது ஐம்பதில் வருமா?

10. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
11. ஒட்டை சட்டி யானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி.
12. ஔவையார் மேலும் குற்றம் உண்டு; அம்மையார் மேலும் அழுக்கு உண்டு.

(இரண்டாம் பாகம்)

1. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
2. சட்டியில் இருக்கிறதுதான் அகப்பையில் வரும்.
3. தனி மரம் தோப்பு ஆகுமா?
4. நல்ல மாட்டிற்கு ஒரு அடி; நல்ல மனிதனுக்கு ஒரு சொல்.
5. பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்.
6. மனக் கவலை பலக் குறைவு.
7. யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே.
8. வளையப் போனாலும் வழியே போ.
9. விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?
10. வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழலாமா?

# மதுரை.

1. தேன் பெருகும் சோலை தென்ன வளநாடு
2. கனிஉதிரும் சோலை கனமதுரை நன்னாடு
3. கரும்பும் இளநீரும் கண்திறந்து மடைபாயும்;
4. கட்டுக் கலம் காணும் கதிர் உழக்கு நெல்காணும்
5. மாடுகட்டிப் போர் அடித்தால் மாளாது செந்நெலென்று
6. யானைகட்டிப் போர் அடிக்கும் அழகான தென்மதுரை
7. மாதம் ஒன்று மும்மாரி வருஷிக்கும் தென்மதுரை
8. பஞ்சம் கிடையாது பாண்டிவள நாட்டில்
9. கருப்புக் கிடையாது கனத்ததொரு மதுரையிலே
10. மதுரையை அடுத்தவர்கள்வாழ்வுகள் பெற்றுவாழ்வார்.

# விருந்து.

1. போஜனச் சாலையிலேபோய்ப் புகுந்தார் எல்லோரும்;
2. வாழை இலைபோட்டு வரிசையுடனே நீர் தெளித்தார்;
3. முப்பழமும் சர்க்கரையும் முடிமன்னர் வைத்தார்கள்.
4. புத்துருக்குநெய்வார்த்துப்போஜனமுண்ணும் என்றார்.
5. மல்லிகை முல்லைபோலே மாற்றுவெள்ளி நிறம்போலே
6. போஜனங்கள் பாவித்துப் பொரிக்கறியும்வைத்தார்கள்;
7. பத்துவிதக் கறியும் பதினெட்டுப் பச்சடியும்
8. எட்டுவிதக் கறியும் இயலான போஜனமும் [தார்
9. பொன்போல் பருப்புவைத்துபுத்துருக்கு நெய்சொரிந்
10. இளந்தோச்சல்தயிரும்இட்டார் எலுமிச்சங்காயும்வைத்
11. போஜனங்கள் ஆனபின்பு பொடியிட்டு கைதிமிறி [தார்
12. கைகால் சுத்திபண்ணிக் கனிவாயும் கொப்பளித்தார்;
13. சித்திரப் பந்தலிலே வந்தார் துரைகளெல்லாம்;
14. சம்மந்தி தாம்பூலம் தட்டோடே வழங்கினார்கள்.

# ஊர்கோலம்.

1. யானையின்மேல் பேரிகையும் குதிரையின்மேல் டங்கா
2. ஒட்டகமேல் நகபத்து ஓசை முழங்கவே தான், [வும்
3. சங்கீத மேளமது சபையில் மூழங்கவே தான்
4. எக்காளை சின்னம் எழில்பெற ஊதிவர
5. நான்கு தெருக்கோலம் நன்றாய் வருகிறார்கள்;
6. தண்ணீர் தெளிப்பார்கள் சாம்பிராணி போடுவார்கள்;
7. வாழை கமுகுகளும் வாசலெல்லாம் நடுவார்கள்;
8. நிலக்கோலம் இடுவார்கள் நிலம் எல்லாம் பூத்தெளித்
9. ஊர்கோல மாகியே உத்தமர்கள் வந்தார்கள்; [தார்;
10. திருஷ்டிகள் சுத்தியே தெருவிலே கொட்டுவார்கள்;
11. வாகனங்கள் விட்டிறங்கி மண்டபத்தில் போய்ப்புகுந்
12. பாலும் பழங்கள்உண்டு பசியாறி வீற்றிருந்தார்.[தார்;

84547

Printed at The Guardian Press, 158-B, Broadway, Madras.

மாக்மில்லன் கம்பெனியாரால் பதிப்பிக்கப்பட்ட எலிமெண்டரி பாடசாலை வகுப்புகளுக்குரிய தமிழ்ப் புத்தகங்கள்.

## கணித சாஸ்திரம்

### ஆரம்ப கணிதம்.

வி. வெங்கடசப்பய்யா, பி.ஏ. எல்.டி., அவர்கள் இயற்றியது.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம்—III, IV, V வகுப்புகளுக்கு | ... | 0 | 8 | 0 |
| இரண்டாம் புத்தகம். V வகுப்பு, I பாரத்திற்கு | ... | 0 | 9 | 0 |

### சுகாதார விளக்கக் கதைகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம்—4-வது வகுப்பிற்கு ... | ... | 0 | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம்—5-வது ,, ... | ... | 0 | 6 | 0 |

### இந்திய சரித்திர சுலபமான பாடங்கள்.

புதிய பதிப்பு, முற்றும் மாற்றி விரித்து எழுதப்பட்டுள்ளது.

5-வது வகுப்பிற்குத் தகுதியானது. ... ... அணா 6

### பூகோள வாசக புத்தகம்.

கே. ஏ. வீரராகவாச்சாரியார், பி. ஏ. இயற்றியது.

புத்தகம் ஒன்றுக்கு ... ... ... ... அணா 4½

| | |
|---|---|
| சென்னப்பட்டணம் | திருநெல்வேலி ஜில்லா |
| செங்கற்பட்டு ஜில்லா | திரிச்சிராப்பள்ளி ,, |
| தஞ்சாவூர் ,, | மதுரை ,, |
| தென் ஆற்காடு ,, | சேலம் ,, |
| கோயம்புத்தூர் ,, | ராமநாதபுரம் ,, |
| வட ஆற்காடு ,, | |

இப்புத்தகங்கள் இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. I பாகம் (72 பக்கங்கள்) பூகோள சாஸ்திரத்தின் பொது விஷயங்களைப்பற்றி விளக்குகிறது. II பாகம் அந்த ஜில்லாவைப் பற்றியும், அதன் சரித்திரத்தைப்பற்றி ஒருவாறுசுருக்கமாகவும்சொல்லுகிறது.

---

Macmillan's Tamil First Reader 3 As.